
கடவுள் படும்பாடு



ரா. அழகப்பன்

செந்தமிழ்ப் பதிப்பகம்

விலை அணா 8



பொன்னி

மாதம் இருமுறை

ஆசிரியர்:
முருகு சுப்பிரமணியன்

பொருளடக்கம்

மலர் 3 இதழ் 15

அம்மான்

ஆண்டி

நக்கீரன்

தெ. ஜெயராமன்

வழிப்போக்கன்

அறிஞர். கா. அப்பாத்துரை

இளமைப்பித்தன்

விசு. திருநாவுக்கரசு

டி. கே. சீனிவாசன்

நா. வேத்தரசன்

ஆகியோரின் எழுத்தோவியங்கள்

திருவள்ளுவர் ஆண்டு 1980
ஆவணித் திங்கள் 25-ம் நாள்

விலை அணா 5
10—9—49

பொங்கும் பசிப்பிணி!

செங்கொடி பிடித்தவர்கள் தம்கை ஓங்கக்கண்
டங்கம் குலைகின்றூர்—ஆளவந்தார்
அச்சம் கொள்ளுகின்றூர்.
எங்கும் வறுமை இருக்கின்ற வரைக்கும்
பொங்கும் ஆத்திரமே—பெரியதோர்
புரட்சி யுண்டாக்கிடுமே!

உண்ண உணவின்றி உடுக்கவும் உடையின்றி
எண்ணில் லாத்துயரில்—இந்நாட்டின்
ஏழைகள் வீழுகின்றூர்!
கண்ணில் ஒளியும் கருத்தினில் அருளும்
உண்டானல் இன்றே—ஆளவந்தார்
உதவிசெய்ய மாட்டாரோ?

படிக்க வசதியில்லை பரவிடும் நோய்கள்தம்மை
விடுதிவைத் தொழிப்பதில்லை—மடமையை
விலக்கும் கருத்துமில்லை.
நடிக்கின்றூர் மக்கள் நடத்தும் ஆட்சியென்றே
படிக்கின்றூர் நேற்றுரைத்த—பாடத்தை
பச்சைக் கிளிகளைப்போல்!

ஆட்சிக்கு வந்த அந்தநாள் தொட்டே
மீட்சியுற்ற நிலைக்குத்தக—மக்களை
மேன்மைப் படுத்தினரா?
கோட்சேக்கள் தம்மைக் கூண்டவிழ்த்துவிட்டார்
வாய்ச்சம்பம் பேசியவர்—ஊரூராய்
வாலாட்டம் போடுகின்றூர்.

பொங்கும் பசித்தீயைப் போக்கும் நினைப்பின்றி
எங்கும் தியர்தமைக்—கட்டவிழ்த்
தேக விட்டுவிட்டே,
செங்கொடி பிடித்தவர்கள் தம்கை ஓங்கக்கண்
டங்கம் குலைவதுமேன்?—ஆளவந்தார்
அச்சம் கொள்ளுவதேன்?

— "அம்மான்"



சென்னை தமிழருக்கே!

'சுயராஜ்யம்' கிடைத்தால் எல்லா நன்மைகளும் கிட்டுமென்று பொதுமக்கள் நம்பினார்கள். வயிறு நிறைய உணவும், வசிக்க வீடும், உடுத்த ஆடையும் கிடைக்குமென்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் ஆந்திர தேசத்திலுள்ளவர்கள் இவற்றோடு ஆந்திரமாகாணமும் வந்து சேருமென்ற நம்பிக்கை யோடிருந்தார்கள். அந்த ஆந்திர மாகாணத்தில் சென்னையும் சேர்ந்திருக்குமென்றும் கனவுகண்டு கொண்டிருந்தார்கள்.

'சுயராஜ்ய'மும் வந்தது; வெள்ளைக்காரன் காங்கிரஸ்காரர்களிடம் ஆட்சியை ஒப்படைத்து விட்டு ஊரை நோக்கிப் பயணம் கட்டினான். ஆனால் வந்த 'சுயராஜ்யத்'தில் மக்களுக்கு உணவு, உடை, உறையுள் கிட்டாமற் போனதில் வியப்பில்லை யென்றாலும், ஆந்திரர்கள் 'சென்னை—ஆந்திர மாகாணமும்' காணப்படாதது தான் ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக அமைந்தது. "விடுதலை வரும்வரை பொறுத்திருப்போம்; இந்தத் தமிழர்களோடு ஒரே மந்திரிசபை நடத்துவோம்" என்று பொறுமை விரதம் பூண்ட ஆந்திரர்களுக்கு இது பெரும் ஏமாற்றமாக முடிந்தது. 'ஆந்திர மாகாணம்' இல்லாத 'சுயராஜ்யம்' எப்படிச் 'சுயராஜ்யம்' ஆக அவர்கட்குத் தோன்றமுடியும்?

மாநாடுகளைக் கூட்டினார்கள்; சென்னையிலே கூட்டங்கள் நடத்தினார்கள்; சென்னை உள்ளிட்ட ஆந்திர

மாகாணம் வேண்டுமென்று தீர்மானத்தின் மேல் தீர்மானம் நிறைவேற்றினார்கள். டில்லிக்குத் தூது சென்றார்கள். 'ஆந்திரப் பிரிவினை உடனே நிகழவேண்டும்' என்ற கோரிக்கைகளை விடுத்த வண்ணமிருந்தார்கள், இவற்றின்பயனாகத் தார்கமிஷன் அறிக்கை வந்தது. அந்த அறிக்கையைப் பரிசீலனை செய்து, நேரு, பட்டேல், பட்டாபி ஆகிய மூவரும் சேர்ந்த கமிட்டி முடிவான தீர்ப்புத்தந்தது. அவர்களின் தீர்ப்பினைக் காங்கிரஸ் காரியக் கமிட்டியும் ஏற்றுக்கொண்டு விட்டது.

அந்தத்தீர்ப்பின் படி ஆந்திரமாகாணம் பிரிக்கப்பட வேண்டு மென்றால், சென்னை நகரத்தின் மீது ஆந்திரர்கள் உரிமை கொண்டாடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டு மென்று அறிவிக்கப்பட்டது. காங்கிரஸ் தலைவர் பட்டாபி சென்னை நகரத்தை விடுத்து ஆந்திரமாகாணத்தை நிறுவி விடலாமென்று பெரும் முயற்சி செய்தார். "சென்னை இல்லாத ஆந்திரமாகாணம் எப்படி ஆந்திர மாகாணமாக முடியும்?" என்று ஆந்திரர்கள் பட்டாபி சீதாராமையாவை நோக்கி ஆத்திரமாகக் கேட்டார்கள். அவர் பேச்சு மூச்சற்று விட்டார்.

மீண்டும் மாநாடு நடத்தினார்கள், ஆந்திரர்கள். சென்னையுடன் ஆந்திரமாகாணம் பிரிக்கப் படவேண்டு மென்று கோரித் தீர்மானம் நிறைவேற்றினார்கள். டில்லிக்குத் தூது சென்றார்கள். சென்னை நகரச்சிக்கல் தீராததொன்றாக, தங்கள் மாகாணப் பிரிவினைக்கு இடையூறாய் நிற்பதைக் கண்டார்கள். யோசனை செய்தார்கள். "சென்னையைப் பங்கு போட்டுக் கொள்ளலாம்" என்று சொல்லிப் பார்த்தார்கள். இவ்வாதமும் எடுபடுவதாயில்லை, "சென்னை ஆந்திரருக்கும் வேண்டாம்; தமிழருக்கும் வேண்டாம்" என்று இப்போது சொல்லத் தொடங்கி யிருக்கிறார்கள். எப்படியும் சென்னை தங்கட்குக் கிடைக்காது என்று தெரிந்தவுடன் 'மத்தியசர்க்காரின் நேர்பார்வையில் சென்னை நகர ஆட்சி நடைபெறட்டும்" என்ற மாற்று யோசனையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

டில்லியிலிருப்பவர்கள் எத்தனைதான் நேர்மையாளர்களென்றாலும், ஆந்திரர்களின் இந்த'தானபுத்தி' அவர்கட்கும் ஆசையைக் கிளறிவிட்டிருக்கிறது என்றே தெரிகிறது. இந்நிலையில் தமிழ் நாட்டிலிருந்து அ. நி. சபைக்குச் சென்றுள்ள உறுப்பினர்கள் பதின்

மர் "சென்னையில் ஒரு அங்குலத்தைக் கூடப் பிறருக்குத் தரமாட்டோம்" என்று அறிக்கை விடுத்திருக்கின்றனர். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறது. பண்டித நேருவைப் பேட்டி காண முயற்சியும் நடைபெறுகிறது. தமிழ் வர்த்தகர் சபையும் 'சென்னை தமிழருக்குத்தான்' என்று தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறது. இம் முயற்சிகளைப் பாராட்டுகிறோம்.

முயற்சிகள் மேலும் நடைபெற வேண்டும். தமிழகமெங்கும் "சென்னை தமிழருக்கே உரியது; ஆந்திருக்கோ, மத்திய சர்க்காருக்கோ அதனை வழங்க ஒப்போம்" என்ற தீர்மானம் சர்வகட்சிக் கூட்டங்கள் மூலம் நிறைவேற்றப்பட்டு டில்லிக்கு அனுப்பப் படவேண்டும். சென்னையில் சர்வகட்சி அன்பர்கள் கலந்து தீர்மானிக்கும் விதமாக மாநாடொன்றும் நடைபெற வேண்டும். தமிழ் மக்கள் சென்னையைப் பொறுத்த வரையில் அந்நகரம் தங்கட்கே என்ற உறுதியோடிருக்கிறார்கள் என்பதை டில்லி உணரச் செய்யவேண்டும். ஆந்திரர் நம்மினத்தவர்கள்; எனவே அவர்களோடு ஏற்படும் போட்டா போட்டிகளை நாம் பெரும் பகுதி தவிர்த்து வந்திருக்கிறோம். என்றாலும் அவர்களின் போக்கு, நாளுக்கு நாள் மோசமாகும் வகையில் சென்று கொண்டிருப்பதைக் காணும் போது, நமக்கு வருத்தம்தான் மேலிடுகிறது. "தங்கட்குக் கிடைக்காத சென்னை தமிழருக்கும் கிடைக்கக் கூடாது" என்று எண்ணும் அளவுக்கு அவர்கள் தமிழர்களின் மீது கசப்புக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. இந்த நச்சு எண்ணம் நிறைவேறக் கூடாது; எவ்வகையிலும் இதனைத் தடுத்தாக வேண்டும்.

தமிழ்நாட்டிலுள்ள 'அரசியல் பெரியவர்கள்' கூடிக் கலந்து பேசிச் சென்னையைப் பொறுத்த வரையில் நல்லதொரு முடிவுக்கு வருவார்களென்று நம்புகிறோம். டில்லி, ஆந்திரரின் பேச்சைக் கேட்டு, சென்னையைக் கமிஷனர் மாகாணமாக்கும் முயற்சியில் ஈடுபடுமானால் அம்முயற்சி தகர்க்கப்படு மென்பதை உணர்த்துவது தமிழ்ப்பெருமக்களின் கடமையாகும். ஆந்திரர்களின் 'வடக்கத்திக் காதல்' தீரும் நாள், தமிழர்களின் உறவு அவர்கட்குத் தேவைப்படும் நாளாக அமையு மென்ற நம்பிக்கை நமக்கு உண்டு. அந் நல்லுறவில் திராவிடக் குடியரசு மலரும் என்பதும் உறுதி!

காலமும் கருத்தும்

கழகத்தின் எதிர்காலம்

திராவிடர் கழகத்தின் எதிர்காலம்பற்றி ஆலோசனை செய்வதற்காகக் கமிட்டிக்கூட்டம் வரும் 17—9—49 அன்று சென்னையில் நடைபெறவிருக்கிறது. பெரியார் போக்கினைத் கண்டித்துள்ள மத்திய நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள் அக் கூட்டத்தில் கலந்துபேசி எதிர்கால வேலைத் திட்டம் பற்றி முடிவு செய்வர் என்று தெரிகிறது. ஏறக்குறைய இரண்டுமாதங்களாகக் கழக வேலைகள் தடைப்பட்டுப்போயிருக்கின்றன. பத்திரிகைகளில் நடைபெறும் 'எழுத்துப்போர்' தவிர உருப்படியான காரியம் ஏதும் நிகழவில்லை. இந்நிலை மாறவேண்டும். கட்சி தக்க திட்டங்களோடு, புதிய தலைமையிற்செயலாற்றத்தொடங்க வேண்டும். அரசாங்கம் ஒன்றன் பின் ஒன்ருக அடக்குமுறையை அவிழ்த்துவிடத் தொடங்கியிருக்கிறது. இந்தி கோலோச்சப் போகிறது. வடமொழிக்கும் வாழ்வு நல்க முனைகின்றனர் ஆட்சியாளர். இந்நிலையில் ஆட்சியாளருக்குத் தக்க முறையில் திராவிடர் கழகம் பதிலளித்தாக வேண்டும். கூடுகின்ற கமிட்டி உறுப்பினர்கள் சிறந்தொரு முடிவுக்கு வருவார்களென்றுநம்புகிருேம்; நாடு, மீண்டும் திராவிடர்கழகத் தொண்டின் பயனைப்பெறுமென்றும் எதிர்பார்க்கிருேம்.

ஜில்லாபோர்டு தேர்தல்கள்

தமிழ்நாட்டில்ஜில்லாபோர்டு தேர்தல்கள் நடைபெற்று முடிந்துவிட்டன. பெரும்பாலும் காங்கிரஸ்காரர்கள் எதிர்பார்த்தது நிறைவேறிவிட்டதென்ருலும், காங்கிரஸுக்குக் கிடைத்துள்ள இவ் 'வெற்றி' உண்மையில் அவர்கள் மகிழக்கூடிய வகையிலில்லை என்பதை நாம் குறிப்பிடத்தான் வேண்டும். ஆட்சி பீடத்தில் காங்கிரஸ், காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவாக மந்திரிகளின் பிரசாரம். தோழர் காமராஜரின் இடைவிடாத சுற்றுப் பிரயாணம், பணக்காரர்களின் ஒத்துழைப்பு — இச் சூழ்நிலையிலும் 130 இடங்களைச் சுயேச்சை வாதிகள் கைப்பற்ற முடிந்திருக்கிறதென்ருல், காங்கிரஸின் செல்வாக்கு சரிந்து கொண்டு வருகிறது என்ற முடிவுக்கு வருவதைத் தவிர வேறு வழியில்லை. திருச்சி, தென்னூற்காடு மாவட்டங்கள் ஒருபடி மேற்சென்று காங்கிரஸுக்கு நல்லதொரு படிப்பினையை நல்கியிருப்பதறிய மகிழ்ச்சியடைகிருேம். அடுத்து வரும் தேர்தல்களின் முடிவு எப்படியிருக்குமென்பதற்கு 'மாதிரி'யாகவே திருச்சி, தென்னூற்காடு தேர்தல் முடிவுகள் காணப்படுகின்றன என்று காங்கிரஸ்காரர்கட்குக் கூற விரும்புகிருேம். மேலும் திருச்சியில் காங்கிரஸுக்கு ஏற்பட்டுவிட்ட தோல்வியைச் சரிக்கட்டப் புதுக்கோட்டைப் பகுதிக்கு எட்டுப்பேரை நியமனம் செய்யப் போவதாகவும் தெரிகிறது.

புதுக்கோட்டையில் தேர்தல் நடத்துவதுதான் முறை. பழைய வாக்காளர் ஜாபிதா என்ற நொண்டிச்சாக்குத் தேவையற்றது. மற்ற இடங்களில் மட்டும புது ஜாபிதாப படியாகவா, தேர்தல நடந்தது? புதுக்கோட்டை மக்கள் இந்நியமன ஏற்பாட்டுக்கு ஒப்பக் கூடாது. காங்கிரஸுக்கு ஆள்சேர்க்கும சூழ்ச்சிக்குப் புதுக்கோட்டையைப் பலியாக்க வேண்டாம் என்று சென்னை அரசினரைக் கேட்டுக் கொள்கிறோம.

நீதி நிர்வாகப் பிரிவினை

சென்னையின் நெடுநாளைய திட்டமான நீதி நிர்வாகப் பிரிவினை வரும் அக்டோபரில் செங்கற்பட்டு, வடாற்காடு மாவட்டங்களில் மட்டும முதன் முறையாக நடைமுறைக்கு வருமென்று தெரிகிறது. குற்றம சாட்டுவோரும், தீர்ப்புக் கூறுவோரும் ஒரு மனிதராகவே இருந்தால், எப்படித் தீர்ப்பு இருக்குமென்று கூறவேண்டியதில்லை. குற்றம் சாட்டுவதே, தண்டிப்பது போலத்தான். இத்தகைய கேலிக்கூத்துத் தான் ஒவ்வொரு மாவட்டத்திலும் இதுவரை நடந்து வந்திருக்கிறது. கலெக்டர் மாவட்டத் தலைமை அதிகாரி; அவரே மாவட்ட நீதிபதி, இந்த ஏற்பாட்டினால் குடிகளின உரிமை பேரளவுக்குப் பாதிக்கப்பட்டது. இதனை உணர்ந்து, நாட்கடந்தேனும், நீதி நிர்வாகப் பிரிவினையை அமுலுக்குக் கொண்டு வர முன் வந்துள்ள அரசினரைப் பாராட்டுகிறோம். மற்ற மாவட்டங்களிலும் தாமதமின்றி இத்திட்டம் மேற்கொள்ளப்படுவதும் அவசியமாகும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறோம்.

இந்தி வெறி

இந்தி வெறி எத்தனை தொலைக்குச் செல்லுமென்பதை அரசியல் நிர்ணய சபைக் காங்கிரஸ் கட்சி நடவடிக்கைகள் நமக்குக் காட்டி வருகின்றன. தேவநாகரி வரி வடிவிலுள்ள இந்தி மொழியை இந்தியாவின் பொதுமொழி என்று தென்னிந்தியர்களும் மற்ற மொழியினரும் ஏற்றுக் கொள்ளத் 'தயார்' கூறியும், 'எண்ணும் இந்தி எண்ணே வேண்டும' என்று பிடிவாதம் செய்யும 'இந்தி வெறியர்'களை நாம் காண்கிறோம். தென்னிந்தியர்கள் சர்வதேச எண்களை (அரபி எண்களை) தான் பயன்படுத்த வேண்டுமென்று வற்புறுத்துவதில் உறுதியாய் இருககின்றனர் என்றறிய மகிழ்கிறோம்.

தென்னிந்தியாவிலுள்ளகாங்கிரஸ்காரர்கள் இதுநாள் வரை "இந்திக்கு ஜே" போட்டதன் பலனைத்தான் இப்போது அனுபவிக்கிறார்கள் முன்பே அவர்கள் உணர்ந்து 'இந்திக்கு ஆதிக்கம், தேடித் தராதிருப்பார்களானால், இந்தி தேடுவாரற்றுக் கிடந்திருக்கும். இத்தகைய வெறி 'ஹிந்தி வாலாக்களுக்கு' ஏற்பட்டிராது. எனினும் இச்சமயத்திலேனும், இந்தி பேசாத மற்றவர்கள் இணைந்து செயலாற்றினால் இந்தி தேசிய மொழியாவதைத் தடுத்து விடலாமென்று கூற விரும்புகிறோம். ஆங்கிலத்தையே நீடிக்கச் செய்து விடுவதும் எளிதில் இயல்வதாகும்.



முதுமையிலும் இளமை திரும்புமா? திரும்பும்; நன்றாகத் திரும்பும். கிழவன் இளைஞனாவதா? நீங்கள் நம்பமாட்டீர்கள்! ஆனால் அன்றாடம் நடைபெறும் நிகழ்ச்சிகள் என்னவோ, நீங்கள் நம்ப முடியாதனவாகத்தான் நிகழ்ந்து விடுகின்றன!

கிழவன் இளைஞனாவது கதையில்லை; உண்மையாக நிகழ்ந்து வருவது. பத்திரிகைகளில் அவ்வப்போது வரும் செய்திகள் இந்த உண்மையை நமக்குப் புலப்படுத்துகின்றன; நம் கண்கள் வியப்பால் விரிகின்றன.

பாகிஸ்தானிலேயே அதிகம் வயதானவர் ஒருவர் இருக்கிறாராம். அவருக்கு 125-வயது ஆகிறதாம். அவருக்கு இப்போது புதியபற்கள் முளைக்கின்றனவாம்; புதுமுடி வளர்கிறதாம்! எப்படி இருக்கிறது, விந்தை!

அமெரிக்காவில் நியூயார்க்கில் 81 வயதுக் கிழவர் ஒருவர்—அவர்பெயர் பெர்னர் மக்பாடன். முதுமையிலும் தன்னிடம் ஆற்றல் உண்டு என்பதைத் தம் தோழர்கட்குக் காட்ட எண்ணினாராம். 3000 அடி உயரத்திலிருந்து பாரசூட்டின் மூலம் குதித்துக் காட்டினாராம்! வேடிக்கை பார்த்த தோழர்கள் மூக்கில் விரலை வைத்துக்கொண்டு யோசிக்கும்படியாகச் செய்து விட்டாரல்லவா, அவர்!

பாகிஸ்தான் கிழவர், அமெரிக்காக் கிழவர் வீரச்செயல்களைப் பார்த்தோம். நம் நாட்டுக் கிழவர்கள் அவர்கட்கென்ன மட்டமானவர்களா? சென்னையில் ஐம்பது வயதுக்கிழவர் ஒருவர் பத்து வயதுப் பெண்ணை (ஆம். நாற்பது வயது வித்தியாசம்) மணந்து தன் இளமையை உலகுக்குக்காட்ட எண்ணினாராம். ஆனால் அந்தப் பத்து வயதுப் பெண் திருமண நாளில் மாயமாய் மறைந்துவிடவே பாவம், கிழவரின் ஆசையில் மண் விழுந்ததாம்!

ஆனால் இந்த ஒரு செய்தியை வைத்துக்கொண்டு நம் நாட்டுக் கிழவர்களெல்லாம் 'காதல் விஷயத்தில்' தோல்விதான் அடைவார்கள் என்ற முடிவுக்கு நீங்கள் வருவீர்களானால், உங்களைப் போல் 'உலகம் அறியாதவர்கள்' யாரும் இருக்கமாட்டார்கள்! ஆணுக்கும் பெண்ணுக்கும் நாற்பது வயது வித்தியாசத்தில் நிறைவேறாத திருமணம் இது. ஆனால் நிறைவேறிய திருமணமும் உண்டு என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது!

செங்கற்பட்டு மாவட்டத்தில் பழவேற்காடு என்றொரு சிற்றூர் இருக்கிறது. அண்மையில் ஜில்லா போர்டு தேர்தல்கள் நடைபெற்றன அல்லவா? அதுசமயம் பழவேற்காட்டிலும் ஓட்டுப்பெட்டி வைத்திருக்கிறார்கள்; மேற்பார்வையாளர் நியமித்திருக்கிறார்கள். ஆனால் தேர்தல் தினத்தன்று அச்சிற்றூரில் யாருமே ஓட்டுப் போடவில்லையாம்! தேர்தல் சாவடிப்பக்கம் தலை நீட்டவே இல்லையாம்! கடைசியில் அதிகாரிகள் காலிப்பெட்டிகளைச் சுமந்து செல்லும் படியாகச் செய்துவிட்டனர் பழவேற்காட்டு மக்கள்! நல்லவேடிக்கை செய்தார்கள்! ஓட்டுப்போட்டால் தானே, திறந்து எண்ணிப் பார்க்கவேண்டும். அந்தச் சிரமத்தையெல்லாம் அவர்கள் ஏற்படுத்த விரும்ப வில்லை. ஜில்லா போர்டுகளுக்குத் தேர்தலென்பதே கேலிக்கூத்து! பழைய வாக்காளர் வரிசையை வைத்துக்கொண்டு நடத்தப்பட்ட ஏமாற்றுவித்தை! இத்தேர்தலின் மூலம் வெற்றி பெற்று வருகின்ற உறுப்பினர்கள் ஜில்லாபோர்டு மூலம் நிறைவேற்றப்போகும் காரியம் ஏதுமில்லை! ஜில்லாபோர்டுகளின் அதிகாரம் அந்த அழகில் இருக்கிறது. இந்த நிலையில் ஓட்டுப் போடுவதும் ஒன்றுதான்! போடாதிருப்பதும் ஒன்றுதான்! இதனைத் தெளிவாக உணர்ந்து மற்றவர்கட்கும் விளங்கும் படியாகச் செய்துகாட்டிய பழவேற்காட்டு மக்களை எத்தனை பாராட்டினாலும் தகும்! 'காலிப் பெட்டி'யை இனிப் 'பழவேற்காடு' என்று சொல்லலாமல்லவா?

ராசிபலன் வெளியிடாத தமிழ்ப் பத்திரிகைகள் மிகக்குறைவு! அதாவது சிறுபான்மை என்று பொருள். இந்தப் பைத்தியம் பத்திரிகைகட்கு ஏன் பிடித்ததென்று நீங்கள் கொதிப்புடன் கேட்கலாம். ஆனால் உங்கட்கு என்ன தெரியும், உலக நிலைமை? ராசிபலன் பார்க்கும் பைத்தியம் வாசகர்கட்குப் பிடித்திருப்பதால்தான் பத்திரிகைகள் இத்திருப்பணியை வாரந்தவறாமல் செய்து வருகின்றன. பாவம்! புதையலையும், நெடுந்தூரம் பிரயாணத்தையும், விரும்புகின்ற காதல் நிறைவேறுவதையும், பரீட்சையில் தேறுவதையும், ராசிபலன் பார்ப்பதன் மூலமாகவாவது 'அடைகின்ற' எண்ணற்ற வாசகர்கள் இவ்வுலகில் உலவும்வரை, பத்திரிகைகட்கு இப் பைத்தியம் தீராது என்பதை நீங்கள் உணர்வீர்களாக! இன்னும் சொல்வதொன்றுண்டு. எகிப்து பத்திரிகையில் இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே வாரபலன் செய்திகள் வெளியிடப்பட்டனவாம்! இந்த அரிய உண்மையை உணர்ந்த பின்னாவது மூவாயிரம் ஆண்டுக்குப் பிறகு வாரபலன் வெளியிடும் நம் தமிழ்ப்பத்திரிகைகளை நீங்கள் பாராட்ட வேண்டும். ஆனால் உங்கள் குதர்க்கபுத்தி சும்மாயிராது. "மூவாயிரம் ஆண்டுக்கு முன்பு இந்த மூடத்தனம் இருந்ததில் ஆச்சரியமில்லை; அறிவுவிளக்கமில்லாத நாட்களில் வாரபலன் பார்ப்பது நாகரிகமாயிருந்திருக்கலாம். மூவாயிரம் ஆண்டு கழிந்து. பகுத்தறிவு ஒளிபரவியுள்ள இந்நாளிலும் வாரபலன் ஏற்குமா?" என்று உங்கள் குறும்புக்

கேள்வியை அவிழ்க்கத்தான் செய்வீர்கள்! நான் உங்கட்குப் பதில் சொல்லத் தயாரிலில்லை! பின் நீங்கள் என்ன செய்ய முடியும்?

பண்டித நேரு அண்மையில் லண்டன் சென்று வந்தாரல்லவா? அப்போது அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு யாருமே பொறாமைப்படக்கூடிய முறையிலிருந்ததாம்! முப்பது கார்கள் அவரை வரவேற்க விமான நிலையத்திற்கு வந்திருந்தனவாம்! 95 பேர் கைகுலுக்கி அவரை வரவேற்றனராம். இந்த அளவுக்கு லண்டனில் யாருக்குமே வரவேற்பு இதுவரையில் நிகழவில்லையாம்! இன்னொரு ருசிகரமான செய்தியும் உண்டு. இங்கிலாந்தில் மவுண்ட்பாட்டன் வீட்டில்தான் நேரு தங்குவது வழக்கம். இம்முறையும் அவ்வாறே தங்கினர். இங்கிலாந்தில் வெண்ணெய் கிடைக்கவில்லையாம! ஆகவே நேரு டப்ளின போகும்போது வெண்ணெய் வாங்கிவரும்படி மவுண்ட்பாட்டன் குமாரிகள நேருவைப் பணித்தனராம்! இந்தச்செய்தியை அவரே வெளியிட்டிருக்கிறார். என்னதான், நமது முதல்வராயிருந்தாலும், லண்டன் வரவேற்பும் நடத்துகிறது; பணிபுரியவும் வைத்துவிடுகிறது, பாருங்களேன்!

இந்தியாவில் படித்தவர் தொகை மூன்று சதவீதம் உயர்ந்திருக்கிறதாம்; பெரிய முன்னேற்றம்! எண்ணி எண்ணிப்பூரிக்க வேண்டிய காரியசாதனை அல்லவா? இந்தப் பெரும்வெற்றி எப்படிக்கைகூடிற்று? நாடெங்கும் பள்ளிக்கூடங்கள் நடத்தியதாலென்றுதானே கூறுகிறீர்கள்! அல்லவே அல்ல. உண்மை வேறுவிதமாக இருக்கிறது. மத்தியமாகாணத்தில் வெல்ல வியாபாரி ஒருவர் தம் வியாபாரத்திற்குக் களிமண் தேவைப்படவே, இந்த நாட்டில் படிக்காதவர் மண்டையிலிருக்கும் களிமண்ணெல்லாம் அவர் கைக்கு வந்துசேரவேண்டியதாயிற்று. 20% களிமண் கலந்து வெல்லவியாபாரம் நடத்தியிருக்கிறார், அவர். ஒரே மனிதர்தானே! எவ்வளவு களிமண்ணைத்தான் அவரால் பயன்படுத்திக்கொள்ள முடியும்? மாகாணத்திற்கு ஐந்து, ஆறு பேராவது அவரைப்போன்ற வெல்ல வியாபாரிகள் ஏற்பட்டால்தான், பாக்கியுள்ள அறியாமை (83%) விரைவில் கரைந்து, நூற்றுக்கு நூறும் படித்தவர்கள் என்ற நிலைமை ஏற்படும். அதற்கு மாறாக, மத்தியமாகாண வியாபாரியைத் தண்டிக்க முற்படுவது, 'விவேகமற்ற' செயலாகுமென்றுதான மூளையுள்ளவர்கள் கூறுவார்கள்!

பெருமை பற்பல காரணங்களால் ஒருவருக்குக் கிட்டுகிறது. செயலால் பெருமையடைவார் உண்டு; சொற்பெருக்கால், எழுத்துவன்மையால், கலைத்திறத்தால் பெருமை எய்துவோரும உண்டு. ஆனால் பெயராலேயே பெருமை அடைவதென்பது எளிதானதல்லவென்றுதான் இதுவரை நான் நினைத்து வந்தேன்; நீங்களும் அப்படித்தான் நினைத்திருப்பீர்கள்! ஆனால்

லண்டனில் ஸர். டி. விஜயராகவாச்சாரியார் பெற்றுள்ள பெரும் புகழைக் கேட்ட பிறகும் நம் நினைப்பை மாற்றிக் கொள்ளாமலிருப்பது 'பெருந்தவறு' 'பெருந்தவறு' ஆகும்! லண்டனில் இவர் பெயரின் நீளத்தைப் பார்த்தவுடனேயே பத்திரிக்கைக்காரர்கள் அதற்காகவே இவர் படத்தைப் போட்டு அதன்கீழ் 'இந்த விநோதம்பார்' என்று எழுத ஆரம்பித்துவிட்டார்களாம்! அவருடைய பெயரை விளக்குவதற்குள் அவருக்குப் போதும் போதுமென்றாகிவிட்டதாம்! பத்திரிகைகள் சுருக்கமாக ஸர் டி. வி. என்று குறிப்பிட்டு ஒருவாறு இந்த நெருக்கடியைச் சமாளித்தனவாம். அவர் தங்கியிருந்த ஹோட்டலிலுள்ளவர்களுக்கும் இந்தப் 'பெயர்ச்சங்கடம்' நேர்ந்திருக்கிறது. ஆனால் அதனை எளிதாகத் தீர்த்துவிட்டார்கள் அவர்கள். அவர் தங்கியிருந்த அறைஎண் 754. ஆகவே அவரை ஸர் 754 என்று அவர்கள் அழைத்து வந்தார்களாம்! எப்படியிருக்கிறது செய்தி, பார்த்தீர்களா? புகழடையவேண்டுமானால் நீளமாக இப்படியொரு பெயர் உங்களுக்கும் எனக்கும் இருக்க வேண்டும்! அவ்வளவுதான்! கையில் புகைப்படத்துடன் நாமும் லண்டனுக்குப் புறப்பட்டுவிடலாம்!

அதிராம்பட்டணம்

24-8-49

கொள்கை ஒன்றே துணை!

இலட்சியக்கோட்டை கண்ணுக்குத் தெரிகிறபோது, எதிரிக்குக் காட்டிக்கொடுத்துவிட்டு ராஜபாட்டையிலே நடக்கிறார் பெரியார்! நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டு-கூடிப் போராடிய இளைஞர்களை நம்ப மறுத்துவிட்டு - அவர் உல்லாசபுரியை நோக்கிப் பயணமாகினார்!...கூட்டு முயற்சி நல்ல பயனைத் தருமென்றாலும் நம்மை உதறிச் செல்லும் அவரோடு கூடிப்பேசுவது எப்படி....?

நரியை எய்து வெற்றிபெறுகிற அம்பைக்காட்டிலும் புலியை எய்து தோல்வி காண்கிற அம்பையே நான் விரும்புகிறேன்——! கொள்கையை விற்று—பணத்தைச் சேர்த்து—கட்சியைக் காப்பாற்றுவதைவிடக்கொள்கையைக் காப்பாற்றி அதனால் தோல்வியே வந்தாலும் மகிழ்ச்சியோடு ஏற்போம்! வெற்றியும் தோல்வியும் இலட்சிய வாதியின் எண்ணமல்ல——சேவை — போராட்டம் — அதுவே அவன் எண்ணம்!

பெரியாரின் பாதை பிரிகிறது!—பிரியட்டும்! ஆனால் கூடிப்போராடிய நம் தொண்டர்களின் பாதைபிரிகிறதே—அதுதான் வேதனையைத் தருகிறது! அந்தத் தொண்டர்களுக்கும் இளைஞர்களும் பிரிந்த பாதையினின்றும் கூடும் காலத்தை கண்ணீர்நிறை கண்களோடு எதிர் நோக்கி நிற்கிறேன்!

கொள்கை பெரிது—அது ஒன்றேதான் நம் பக்கத் துணை!

என். எஸ். இளங்கோ



இருபத்தைந்தாம் அத்தியாயம்
மந்திரி குமாரி!

'அந்தஸ்து' என்பது ஒரு மனிதனுடைய அறிவையும் ஒழுக்கத்தையும், நாணயத்தையும யோக்கியதையையும் குறிக்குமென்று அன்றுவரை நான் நினைத்திருந்தேன். அது பணம் ஒன்றைத்தான் குறிக்குமென்ற விஷயம் இன்றுதான் எனக்குத் தெரிந்தது. பணம் அறிவில்லாதவனை அறிவுள்ளவனாகச் செய்துவிடுகிறது; ஒழுக்கமில்லாதவனை ஒழுக்கமுள்ளவனாகச் செய்துவிடுகிறது; நாணயமில்லாதவனை நாணயமுள்ளவனாகச் செய்துவிடுகிறது; யோக்கியதை யில்லாதவனை யோக்கியதையுள்ளவனாகச் செய்துவிடுகிறது. ஆம். பகுத்தறிவற்ற நம் சமுதாயம் அத்தனை நற்சாட்சிகளையும் பணக்காரர்களுக்குச் சேர்த்து அளித்து விடுகிறது. இதன் காரணமாக, அறிவும் ஒழுக்கமும் உள்ளவர்கள், நாணயமும் யோக்கியதையும் உள்ளவர்கள் தங்கள் காலமெல்லாம் வருந்தி அணுவணுவாகச் சாகவேண்டியிருக்கிறது.

இத்தகைய வருத்தத்துக்கு நாளடைவில் நானும் ஆளானேன். ஆனால் என்னை அணுவணுவாகக் கொன்றுவிடக்கூடிய சக்தியை அந்த வருத்தத்துக்குச் சாந்தினி அளிக்கவில்லை. அவளுடைய இனிய பேச்சும் இதயத்தை மலரவைக்கும் சிரிப்பும் என்னுடைய வருத்தத்தைப் போக்கி, வாழ்க்கையில் மகிழ்ச்சி கொள்ளச் செய்தன. என்றைக்காவது ஒரு நாள் நாமும் வாழ்வோம் என்ற நம்பிக்கையில், ஏதோ ஓர் இனந் தெரியாத இன்ப உலகத்தைச் சிருஷ்டித்துக் கொண்டு அதில் நான் என்னுடைய மனம் போனபடி சஞ்சரித்து வந்தேன். நிஜ உலகத்தைவிட என்னுடைய கற்பனையுலகம் எவ்வளவோ சிறந்ததாகவும் எனக்குத் தோன்றிற்று.

எனினும் பாரிஸ்டர் பரந்தாமன் மந்திரியான பிறகு என்னு

டைய கற்பனையுலகம் புயலுக்கும் பூகம்பத்துக்கும் ஆளாக நேருமோ என்ற அச்சம் தோன்றி என்னை வதைத்தது. அந்த அச்சத்தைச் சாந்தினி மட்டுமல்ல, பாரிஸ்டர் பரந்தாமனும் போக்கி வைத்தார். அவர் தம் மாகாணத்துக்குக் கனம் மந்திரியாகக் காட்சியளித்தாலும் எனக்குப் பழைய பரந்தாமனாகவே காட்சியளித்து வந்தார்.

அன்று வழக்கம்போல் நான் 'காந்திபவன'த்தை அடைந்த போது, பாரிஸ்டர் பரந்தாமன வீட்டில் இல்லை. இப்பொழுதெல்லாம் அவரை வீட்டில் பார்ப்பதே அபூர்வமாயிருந்தது. அவரை மட்டுமல்ல; அவருடைய இளையாளையும் பார்ப்பது அபூர்வமாயிருந்தது. இருவருமாகச் சேர்ந்தே இப்பொழுது தேசத் தொண்டில் ஈடுபட்டனர். எங்கு சென்றாலும் பாரிஸ்டர் பரந்தாமன் தம் மனைவியையும் கூடவே அழைத்துச் சென்றார். ஆண் குலத்துக்குத் தொண்டு செய்யும் தன் கணவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அவருடைய மனைவியும் பெண் குலத்துக்குத் தொண்டு செய்து வந்தாள். முக்கியமாக நகரப் பிரமுகர்கள் அடிக்கடி நடத்தும் தேநீர் விருந்துகளுக்கு, அவர்கள் அவசியம் செல்லவேண்டியிருந்தது. பார்க்கப் போனால் பரந்தாமனைப் போன்றவர்களுக்கு அது தானே தேசத்தொண்டு?

கனம் பரந்தாமனைக் காணாமல் நான் ஏமாற்றத்துடன் 'காந்தி பவன'த்தை விட்டு வெளியேறியபோது, வாசலில் கார் வந்து நின்றது. அதிலிருந்து பரந்தாமன் இறங்கவில்லை; சாந்தினி இறங்கினாள்.

"மந்திரி குமாரி இப்போது தான் ஆஸ்பத்திரியிலிருந்து வருகிறாள் போலிருக்கிறது!" என்றேன் நான்.

"ஆமாம். ராஜகுமாரா!" என்றாள் அவள் சிரித்துக்கொண்டே.

"நான் ராஜகுமாரனும் இல்லை; மந்திரிகுமாரனும் இல்லை!"

"அப்படியானால் நானும் ராஜகுமாரியும் இல்லை; மந்திரி குமாரியும் இல்லை!"

"நீ ராஜகுமாரியா யில்லாமலிருக்கலாம். ஆனால் மந்திரி குமாரிஎன்பதை அவசியம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்"

"சரி, ஒப்புக்கொள்கிறேன். நான் மந்திரிகுமாரியா யிருந்தால் நீங்கள் மந்திரியின் மாப்பிள்ளையாக இருந்துவிட்டுப் போகிறீர்கள்!" என்றாள் அவள்.

இருவருமாகச் சேர்ந்து உள்ளே சென்றோம். அவள் என்னை ஹாலில் உட்கார வைத்துவிட்டு அடுக்களைக்குச் சென்றாள். சிறிது நேரத்துக்கெல்லாம் இரண்டு கைகளிலும் இரண்டு 'கப்' காப்பியை எடுத்துக்கொண்டு வந்து எனக்கு எதிரே உட்கார்ந்தாள்.

"நம்மைக் கூப்பிட்டு யாரும் தேநீர் விருந்து நடத்தப் போவதில்லை. ஏனெனில், நம்மால், அவர்களுக்கு ஆக வேண்டிய காரியமோ, அவர்களால் நமக்கு ஆகவேண்டிய காரியமோ ஒன்றும் கிடையாது. எனக்கு நீயும் உனக்கு நானும் தான் தேநீர் விருந்து நடத்திக் கொள்ள வேண்டும். அதை முதன்முதலாக நீ இப்போது ஆரம்பித்துவைத்திருக்கிறாய்!" என்றேன் நான்.

"ஏன், அப்பாவின் சொற்படி நடந்திருந்தால் நீங்களும் இன்று ஒரு மந்திரியாகி யிருக்கலாமே!"

"உன்னுடைய அப்பாவைப் போல் என்னுடைய மனச்சாட்சியை என்னால் கொன்றுவிட முடியவில்லையே!"

"அப்படியானல் நீங்கள் சொல்வதுதான் சரி; எனக்கு நீங்களும் உங்களுக்கு நானும் தேநீர் விருந்து நடத்திக் கொள்ள வேண்டியதுதான்!" என்ருள் அவள்.

இருவரும் காப்பியை எடுத்து உள்ளே ஊற்றி வைத்தோம்.

"கூடிய சீக்கிரமே நீங்கள் மாமாவாகப் போகிறீர்கள்!" என்ருள் சாந்தினி.

"யாருக்கு? எனக்கு ஒன்றும் புரியவில்லையே!" என்றேன் நான்

"அதாவது திருவாளர் மணவாளன் அவர்கள் 'அப்பா'வாகப் போகிருர் என்கிறேன்!"

"நிஜமாகவா?"

"ஆமாம்; இன்று பரிமளாவிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது"

"அப்படியானல் அது துக்கப்பட வேண்டிய விஷயம்!"

"ஏன்?"

"இனிமேல், அவர்களுடைய வாழ்க்கை கசந்துபோகும்."

"கசக்காது; இனிக்கும்!"

"கசக்கும் என்பது உண்மை; இனிக்கும் என்பது கற்பனை."

"உண்மையாகவாவது இருக்கட்டும்; கற்பனையாகவாவது இருக்கட்டும். நீங்கள் எப்போது 'அப்பா'வாகப் போகிறீர்கள்?"

"உன்னைக் கல்யாணம் செய்துகொண்ட பிறகு!" என்றேன் நான்.

அவள் சிரித்தாள்; நானும் சிரித்தேன்.

அதே சமயத்தில், "அது சரி; நீர் எப்போது கல்யாணம் செய்துகொள்ளப் போகிறீர்?" என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தார் கனம் பரந்தாமன்.

அப்போதுதான் பேச்சின் சுவாரஸ்யத்தில் கார் வந்து நின்ற சத்தம்கூடக் காதில் விழவில்லை என்று எங்களுக்குத் தெரிந்தது.

அப்பாவைக் கண்டதும் சாந்தினி எழுந்து தன் அறைக்குச் சென்ருள. அவளுடைய இடத்தில் பரந்தாமன் உட்கார்ந்தார்.

"என்னுடைய 'நாடோடி வாழ்க்கை' முடிந்த பிறகு கல்யாணம் செய்து கொள்ளலாம் என்று இருக்கிறேன்" என்றேன் நான்.

"நல்லவேளை வாழ்க்கை முடிந்த பிறகு என்று சொல்லாமல் இருந்தீரே! - சாந்தினி பிழைத்தாள்!" என்ருர் பரந்தாமன்.

நான் பதில் ஒன்றும் சொல்லவில்லை.

"பேசாமல் நான் சொல்வதைக் கேளும்!" என்று ஆரம்பித்தார் அவர்.

"என்ன?" என்று கேட்டேன்.


"முதலில் நீர் ஏதாவது ஒரு வேலையைப் பாரும்."

"என்ன வேலை பார்ப்பது?"

"எனக்குக் காரியதரிசியாக இருக்கிறீரா?"

"வேணடாம். அது எனக்கும் சிரமமாயிருக்கும்; தங்களுக்கும் சிரமமாயிருக்கும்."

"கல்யாணமான பிறகுதானே சிரமமாயிருக்கும்? அது



வரை காரியதரிசியாக இருந்தால் என்ன?"

"அதற்காகச் சொல்லவில்லை; தங்களுடைய காரியங்களில் நான் ஒத்துழைக்கமுடியாது என்பதற்காகச் சொல்லுகிறேன்."

"அப்படிப்பார்த்தால் பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களில் என்னைவிட நல்ல ஆள் உமக்குக் கிடைக்கமாட்டானே?"

"மீண்டும் தங்கள் பழைய கதையை ஆரம்பிக்கிறீர்கள்!"

"சரி, புதுக் கதைக்கு வருவோம். அரசாங்கத்தில் வேறு ஏதாவது உத்தியோகம் பார்க்கிறீரா?"

"அதற்கு நீங்கள்தானே ஏற்பாடு செய்யவேண்டியதாகயிருக்கும்"

"ஆமாம்"

"பொதுவாழ்வில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்களுக்குத் தெரிந்தவர்களுக்காகச் சலுகை காட்டுவது வெறுக்கத்தக்க காரியமல்லவா?"

"வெறுக்கத்தக்க காரியமல்ல; விரும்பத்தக்க காரியம். ஆனால் வெளியே தெரியக்கூடாது—அவ்வளவுதான்!"

"வெளியே தெரியாமல் எப்படி இருக்கும்?"

"தெரியவே தெரியாது. இதோ, என்னைப் பார்! கீழே கதர் வேஷ்டி இருக்கிறது; மேலே கதர்ச்சட்டை இருக்கிறது; நாவில் காந்தி நாமம இருக்கிறது; தலையில் காந்திக் குல்லாய் இருக்கிறது. இவற்றை மீறி எப்படி என்னுடைய அயோக்கியத்தனம வெளியே தெரிந்து விட முடியும்?"

"வெளியே தெரியா விட்டாலும் தங்களுடைய மனச்சாட்சிக்காவது தெரியாதா?"

"அந்தப் பெயருடன் ஒன்று என்னுள் இருப்பதையே நான் அடியோடு மறந்து விட்டேனே! அதனால்தானே என்னால் நாலு பேரைப் போல வாழ முடிகிறது?"

"அப்படிப்பட்ட வாழ்க்கையைத்தான் நான் விரும்பவில்லை!"

"உமக்காக விரும்ப வேண்டாம்; சாந்தினிக்காக விரும்பும்!"

"சாந்தினிக்காகவும் அத்தகைய வாழ்க்கையை நான் விரும்பவில்லை; மனச்சாட்சிக்குப் பங்கமில்லாமல் வாழக்கூடிய வாழ்கையைத்தான் நான் விரும்புகிறேன், அதையேதான் சாந்தினியும் விரும்புவாள் என்று நான் நினைக்கிறேன்."

"அப்படியானால் அதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது?"

"என்னவழி?" என்று ஆவலுடன் கேட்டேன் நான்.

"இருவரும் ஏக காலத்தில் செத்துப் போவதுதான் அதற்குள்ள ஒரேவழி!" என்றார் பரந்தாமன்.

நான் யோசனையில் ஆழ்ந்தேன்.

(தொடரும்)



பாரதிதாசன் பரம்பரை


எங்கே அவள்?

பிறந்தநாள்தொட்டு எனைத்தாங்கும் புவியே!சாற்று
புகைமேகம் சஞ்சரிக்கும் வானே!சாற்று
நெறிபிறழாக் கதிரவனே! நீதான்சாற்று,
நிறையொளியால் எழிலமைக்கும் நிலவே!சாற்று
வறுமையினைத் தமிழ்மொழியால் அழித்தேயுள்ளம்
மகிழ்வுற்ற என்வாழ்வில், புதுமையொன்றும்
அறியாத என்னகத்தில் தன்தோற்றத்தை
அணங்கொருத்தி தீட்டிவிட்டாள்; அவளின்றெங்கே?

வான்வருடி மலர்சொரியும் சோலையே!இவ்
வையத்தின் இயற்கையெழில் உயர்த்திக்காட்டும்
கானகமே! பெருமலையே! அருவியே!நான்
கடமையிலே சிறிதேனும் பிறழ்ந்ததுண்டா?
ஏன்அமைதி சாற்றுங்கள்? உண்மைதன்னை
இனிமைசேர் தமிழ்ப்பண்பைச் சுவைத்தவென்னை
மான்விழியால் தேன்சொற்கள் சுவைக்கத்தந்தாள்.
மனமுவந்தேன் மயங்கிவிட்டேன். அவளின்றெங்கே?

தோழர் தே. ஜெயராமன் புதுச்சேரியைச் சேர்ந்தவர். அன்று வராத ஆசைக்காதலி 'எங்குசென்றுளோ?' என்ற ஏக்கத்தில், எதை எதையோ நோக்கி 'எங்கே அவள்?' என்றுகேட்கிறார் இந்தப் பாடலில் —ஆசிரியர்





இரண்டாம் பாகம்

முதலாம் அத்தியாயம்

சூழ்ச்சிக் கரு!

ஸுராஜ் முடிசூடிக்கொள்வதற்குள் அதனைத் தடுத்து நிறுத்திவிடலாம் என்று யோசித்தான் அமீன் சந்த். ஆனால் சிந்தனை தந்த தீர்ப்போ வேற்றுருவுடன் வெளிவந்தது. குற்றவாளியைக் கூண்டிலேற்றி நிறுத்திப் பிறகு தூக்குத் தண்டனையென்று தீர்ப்பளிப்பதைப் போல அவனை அரியணையேற்றி அழிவுக்குழியில் தள்ள வேண்டும் என்று முடிவுக்கு வந்தான். ஆகவேதான் முடிசூட்டு விழாவில் முன் நின்று காரியங்களாற்றும் முக்கிய பிரமுகர்களில் முதல்வனானான், சூழ்ச்சியின் தோழன், துரோகத்தைத் தாரமாகக்கொண்ட அமீன்சந்த்!

அலிவர்திகானுடைய சவ அடக்கத்திற்குப் பிறகு துக்கத்தால் வெளியில் எழுந்து நடமாடாமலே கிடந்தான ஸுராஜ். அதுபோலவே அமீன்சந்த்தும் வெளியில்வரவில்லை. வெளியில் வாராமல் அவன் வேறொரு புதியபடுகுழி வெட்டத் திட்டமிட்டபடியே இருந்தான். தனது இரகசிய மாளிகையினுள்ளிருந்து கொண்டு ஊரில்பெரிய சீமான்களாகஉள்ளவர்களையழைத்து விருந்து நடத்துவதுபோல அவர்களின் நேர்மையான நெஞ்சங்களிலே துரோகத்தைத் தூவப் பார்த்தான். வெற்றி கிட்டவில்லை. வேறொரு முறையைக் கையாண்டான். அதனால்தான் தனது குல எதிரியின் கோலாகல விழாவைக் குதூகலத்துடன் நடத்துவதுபோலவே நடித்தான்.

என்றும்போலவே அமீன் சந்த் தனது இருட்டறையில் உட்கார்ந்திருந்தான். அவனது மடியிலே தலைவைத்துப்படுத்திருந்தாள்நளினி அப்பொழுது சோணிசந்த் ஓடோடிவந்தான். வியர்வை கொட்டக் கொட்டப் பெருமூச்சு வாங்க வாங்க வந்து நின்றான்.

"சோணி, புதிய செய்தி...?"

அவன் தனது தலைவனின் செவிகளில் ஏதோ கூறினான். அந்த வஞ்சகச் சிரிப்புக்காரன் முகத்தில் மீண்டும் தெளிவு மின்னிற்று!

"டாக்காவில் கொலையா...?"

"ஆம்!"

"சரி, சரி, முயற்சி செய்வோம்"

சோணிசந்த் திரும்பினான். நளினியும் நகர்ந்தாள்!

அமீன்சந்த் சிந்தித்தான்...

டாக்காவின் தலைவன்கொல்லப்பட்டான். ஆம். அவனது கூட்டத்தாரால்! கொலைசெய்வது அவர்களுக்குச் சாதாரண விளையாட்டு. ஆனால் ஒரு கொலையின் மூலம் எவ்வளவு நன்மைகளடையலாம் என்று கணக்குப் போடுவதுதான் அமீனசந்தின் வேலை! இக்கொலையால் அவனுக்குக் கிடைக்கும் நலம் என்ன? டாக்காவிலுள்ளவன் ஸுராஜுவுக்கு அடங்கியவன். ஒருவேளை ஸுராஜுவின் சினத்தைக் கிளறலாம்...! அதன் விளைவு...? குட்டிக்கலகம் ஏற்படும். அமீன்சந்த்தின் திட்டம் அதுவல்லவே! பெரிய போராட்டமே நடத்த அவன் முயற்சி செய்கிறான். அதுவும் தன்னை ஏமாற்றிய வெள்ளையர்களும், தனது மதவிரோதியான ஸுராஜுவின் கூட்டத்தாரும் சண்டையிட வேண்டும். அந்தப் பயங்கரக் காட்சியைப் பார்த்துப் பரவசப்படவேண்டும் — அதுவன்றோ அவன் நாளும் கண்டுகொண்டிருக்கும் கனவு! அது பலிக்குமா? அதற்கு வழியென்ன? "கனவு பலிக்குமோடி கண்ணம்மா" என்று அவன் மனம் பாடிக்கொண்டே இருந்தது.

டாக்காவின் தலைவன் வெள்ளையர்களால்தான் கொல்லப்பட்டான் என்ற வதந்தியைக் கிளப்பிவிட்டால் என்ன? கிளப்பி விடலாம். முடியும். ஆனால் சுபேதார் நம்பவேண்டுமே! அதற்கேற்ற ஆதாரங்கள் உண்டா? உண்டாக்க முடியாதா? உண்டாக்கலாம். சமயமும் சந்தர்ப்பமும் சாட்சி சொல்ல வேண்டுமே...! அப்படியே இருந்தாலும் சுபேதார் போருக்குப் புறப்படுவான என்பது என்ன நிச்சயம்? யார் உறுதி கூற முடியும்? கொலையுடன் கொள்ளையும நடத்தினால் ஒரு வேளை நம்பலாம். கொள்ளையடிக்கக் கூலிப் பட்டாளம் நாடெங்கும் உள்ளனர். அமீன்சந்த்தின் சூழ்ச்சிக்குழுவினர் வெவ்வேறு உருவில் வெவ்வேறு ஊர்களில் வாழ்கின்றனர் யாரும் சந்தேகிக்க முடியாத வகையில் உலவுகின்றனர். ஆகவே கொள்ளையடிப்பது எளிது. ஆனால் காரியம வெற்றியடைய வேண்டுமே! 'ஜேராமசந்த்'கூட்டம் தொட்ட காரியங்களில் தோல்வி கண்டதில்லை.

அமீன்சந்த் இப்படிப்பலப்பட யோசித்தான். திட்டமாக எந்த முடிவுக்கும் வரவில்லை. அந்த நிகழ்ச்சி சிக்கலான எதிர்காலத்தை எதிரொலியாக்கிக் கொண்டிருந்தது! ஆகவேதான் திடமாகக் குறிப்பிட்ட முடிவுக்கு வர வசதியில்லாமலிருந்தது. இறுதியாக வந்த தீர்மானம் — எப்படியும் ஒரு முறை டாக்கா நகருக்கு நேரில் செல்வது என்பதுதான்! அப்படிப் போனால் ஏதாவது நன்மை விளையலாம் என்று அவன் மனம் அவனுக்கு ஆறு

டம் சொல்லிக்கொண்டிருந்தது!

அப்படிப் போகும்போது தன்சூது வெளிப்பட்டு விட்டால் என்னசெய்வது? ஆகவே டாக்கா பிரயாணம் அரசாங்கத் துணையுடன் இருப்பது நல்லது. சுபேதாரிடம் நேரில் பேசிய பிறகு அவனின் அனுமதியுடன புறப்பட்டுச் சென்றால் சந்தேகத்திற்கு இடமில்லை. பிறகு தனது வஞ்சக பஞ்ச தந்திரங்கள் எதிர்ப்பின்றி பாயும், போட்டியின்றி விளையாடும் ஆகவேதான் அவன் சுபேதாரைச் சந்திக்க உறுதி கொண்டான். ஆனால் போவதற்கு முன்னால் தன் வருகையைத் தெரிவிக்கப் புதியதோர் முறையைக் கையாண்டான். அவனுக்கு அது எளிது — ஆம், மானத்தைப் பணயம் வைத்து வயிற்றுப் பிழைப்பு நடத்தும் கூட்டத்திற்கு அது சர்வசாதாரணமான நிகழ்ச்சி — ஆனால் மயிர் நீப்பின் வாழாக கவரிமான் அன்னார் இந்த செய்தியைக் கேட்கவும் கூசுவர்!

"யார் அங்கே?......"

அமீன்சந்த் அழைத்தான்.

புன்னகை பூக்க வந்தாள் பூங்கொடி நளினி. அவளைத் தொடர்ந்து ஊர்மிளாவும் நுழைந்தாள்.

"அப்பா..." என்றாள் ஆர்வத்துடன.

"அரண்மனை செல்வோமே, அம்மா" என்றான் அவன்.

"அவரைப் பார்க்கவா?" என்று தலையைத் தாழ்த்தினாள்.

"ஆம்..." என்று அழுத்தினான் வார்த்தையை.

"அப்படியானால் ஆகட்டும்" என்று முத்தாய்ப்புவைத்தாள்!

மகள் முன் செல்ல அப்பன் பின் சென்றான். ஊர்மிளா முடீன்கானை நாடிச் சென்றாள். அமீன்சந்த் நிலைமையை விளக்கினான். தன் அப்பனுக்காகச் சுபேதாரைக் கண்டு பழைய காளிகோயில் நிகழ்ச்சியை நடத்தி டாக்கா நிகழ்ச்சியைச் சிறிது சிறிதாகக் கூறினாள்.

"டாக்காவில் கொலையாமே!"

"வெள்ளையர்கள் தான் காரணம்..."

"கொள்ளையிடக்கூடத் திட்டம் இருக்கிறதாம்"

"இவைகளையெல்லாம் அப்பா சொன்னார்"

"வாடிக்கைக்காரர்கள் எழுதியிருந்தார்களாம், வழக்கமான வியாபாரக் கடிதங்களில்"

இப்படிச் செய்தியைத் துண்டு துண்டாக்கி இடையிடையே செருகி விட்டாள். அவளுக்கு உள்ளுக்குள் பயம் வேறு — எங்கே முடீன் பார்த்து விடுகிறானோ என்று! சுபேதார் முகம் சிவந்து விட்டது!

"சரி, உன் தந்தையை நான் பார்க்கவேண்டும்"

"வரச் சொல்கிறேன், இப்பொழுதே!"

ஊர்மிளா வெளியில் வந்தாள் வெற்றிப் புன்னகையுடன்! அமீன்சந்த் பிறகு சுபேதாரைச் சந்தித்தான். டாக்காவில் நடந்தவற்றை மிகத் தெளிவாகப் புளுகினான். அவனும் நம்பிவிட்டான். பிறகு அமீன்சந்த்தை நேரில் சென்று நிலைமையைப் புரிந்து வரப்

பணித்தான்! ஆனால் அமீன் சந்த் போவது இரகசியமாக இருக்கவே விரும்பினான். உடன் டாக்காவின் திவானுக்கு வேறு கட்டளை பிறந்தது. நகரத் தலைவனின் சொத்துக்கள் எல்லாம் உடன் எடுத்து வர வேண்டும் என்று செய்தியனுப்பினான். அமீன்சந்த் தனது திட்டங்கள் அணுவும் குறையாமல் வெற்றி பெறுவது கண்டு தானே ஆச்சரியப்பட்டுக் கொண்டான். ஆனால் அழிவுக்குழியை நோக்கிப் பிரயாணம் செய்கிறான் என்பது அவனுக்குத் தெரியவில்லை!

இரண்டாம் அத்தியாயம்

டாக்காவில்!

கிஷோனிதாஸ் பரபரப்பாக இருந்தான். ஆடை, அணிகள் அடுக்கடுக்காக அவனைச் சுற்றிலும் பரவிக்கிடந்தன. ஒரு வேலைக்காரன் அவைகளை யடுக்கிக் கொண்டிருந்தான். எங்கோ வெகுதூரப்பிரயாணத்திற்கு ஆயத்தமாகிக்கொண்டிருந்தான் என்பது விளக்கமாகத் தெரிந்தது.

"அடேய், அப்பா ஏன் இன்னும் வரவில்லை?"

"வருவதாகத்தானே சொன்னார். வந்துகொண்டே இருப்பார். வந்து விடுவார்"

"நீ உடனே ஓடு. ஓடியழைத்து வா"

வேலைக்காரன் ஓடினான். கிஷோனிதாஸ் இங்கும் அங்கும் ஏதையோ தேடிக்கொண்டிருந்தான்.

கிஷோனிதாஸ்.....? டாக்காவின் தலைவன் கொல்லப்பட்டான். ஏன், எப்படி...... மாண்டான என்று யாருக்குமே தெரியாது! அவனது திவானின் மகன்தான் கிஷோனிதாஸ். இனி மாண்டவரின் உடமைகள் டாக்காவில் இருப்பது சரியல்ல என்று திட்டமிட்டு, சுபேதாரின் கட்டளைப்படி மூர்ஷிடாபாத்துக்கு அனுப்பிவிடத் தீர்மானித்தான் திவான். அதன்படியே கிஷோனிதாஸ் தலைமையில் எடுத்துச் செல்ல ஏற்பாடுகளும் செய்தான். அன்றைக்குத் தான் பிரயாணம் தொடங்க வேண்டிய நாள். ஆனால் அனுப்பி வைக்கவேண்டிய திவான்ஜி இன்னும் வரவில்லை.

"என்னடா அதற்குள்ளே திரும்பி விட்டாய்?'

உடன் திரும்பி வந்த வேலைக்காரனைப் பார்த்துக் கேட்டான் இப்படி!

"இல்லை மகாராஜ்! யாரோ தங்களைப் பார்க்கக் கோட்டை வாயிலில்நிற்கிறார்கள். அதைச் சொல்லிவிட்டு......" என்று இழுத்தான் பணியாள்.

"யார் அது, என்னைப் பார்க்க இந்த நேரத்தில்?"

"அந்த ஆள் இந்த ஊர் அல்லவாம், இருப்பிடம் கல்கத்தாவாம்"

இந்த விடையைக் கேட்ட திவானின் மகன் திகைத்துப் போனான். ஆர்வத்தால் அசையாத சிலையானான்!

கல்கத்தா......!

ஆம், எவ்வளவு அழகான பெயர். அவனது முகத்தில்

அந்த வார்த்தையைக் கேட்ட வுடன் மகிழ்ச்சி பொங்கியது. கல்கத்தா — உன் ஊர் எது என்று கேட்டபோது அவள் கூறிய விடை இன்னமும் அவன் காதுகளில் இனித்துக் கொண்டிருந்தது! அவளது பொன்னையும் தோற்கடிக்கும் மேனி......அப்பா, அவன் இத யம் உதைபந்தின் 'பிளாடர்' போல உப்பி வடிந்தது! அதிலே அவ்வளவு கவர்ச்சி... ......அந்த வளைவு வளைவான கேசம், அதை அவள் வாரி விட்டிருந்த வகை அவனை ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது. கேசம் நிறத்தில் கருப்பல்ல. தங்கத்தை வார்த்து விட்டது போன்றிருந்தது — அதுவும் அழகாய்த்தானிருந்தது. அவ ளது நிலம் பாய்ந்த இரண்டு கண்களும் அல்பிரூனியின் புத் தகங்கள் தான்! ஆயுள் முழு வதும் படிக்கலாம்.

அந்தச்சுந்தரி ஒரு வெள்ளைக் காரி! அன்று அவள் டாக்கா விற்கு வந்தபொழுது உடைந்துபோன உருதுவில் பேசினாள். ஒவ்வொன்றும் முத்து என்றுதான் அவன் எண்ணினான்.

"உன் இருப்பிடம்......"

"கல்கத்தா"

இந்த நினைவுதான் அவனுக் குச் சட்டென்று தோன்றியது.

"டாக்காவை நான் சுற்றிப் பார்க்க வேண்டும்" என்றாள் அவள்.

அடடா! அந்தக் கோச்சு வண்டியில் அவளுடன் செய்த பிரயாணம் — பிரயாணமா அது,............ — எவ்வளவு இன்பகரமானது! அவளுடன் இணைந்து உட்கார்ந்திருந் தான். அவன் தோள் மீது அடிக்கடி கையைப்போட்டு "இது என்ன? அந்த கட்டிடத் தில் யார் இருக்கிறார்கள்?......" என்று அவள் கேட்ட பொழு தெல்லாம் அவன் புளகாங் கிதம் அடைந்தான்.

கடைசியில் கல்கத்தாவிற் குக் கிளம்பினாள்- அந்த நேரத் தில் அவன் கையைப் பிடித் துக் குலுக்கினாள். ஏனோ அப் படி அழுத்தினாள்? அவனுக்கு ஏதோவெறியுணர்ச்சி — திடீ ரென்று ஒரு முத்தம்! அவள் அதனால் வெட்கப்பட்டாளா, வெறுப்புற்றாளா?......... ஒரு பாதிச் சிரிப்பு!

அவள் பெயர் லூஸி. ஒரு வேளை அவள் அனுப்பியிருப் பாளோ?......... இவ்வளவும் ஒரு கண நேரத்தில் அவன் மனத்திற்குள் படையெடுத் தன!

"அடேய்!" என்றான்.

அதுவரை தன் தலைவன் ஏன் அப்படி மலைத்து நின்று விட்டான் என்று புரியாமல் தானும் அசைவற்று நின்று கொண்டிருந்த வேலைக்காரன் திடுக்கிட்டான்.

"மகாராஜ்" என்றான்.

"உடனே அவரை அழைத்து வா" கட்டளை நிறைவேற்றப் பட்டது.

"ஹி ஹி ஹி......"



"என்னை அமீன்சந்த் என்பார்கள் நாட்டில், நான் கல்கத்தாவில்......" என்று தன்னைத்தானே அறிமுகப்படுத்திக்கொண்டான்.

"அது சரி லூஸியை உங்களுக்குத் தெரியுமா?" என்று அவசரப்பட்டான் அவன்.

லூஸி.......இந்தப் பெயரைக் கேட்டவுடன் அமீன்சந்தின் முகத்தில் ஒரு வகையான உணர்ச்சி பாய்ந்தது. ஆனால் அதனை வருணிக்க முடியாது! ஏதோ காரியமாக வந்த அவனுக்கு ஒரு புதிய வேட்டை கிடைத்துவிட்டது. லூஸி...... அவள் யார்? அவளை இவன் அவ்வளவு அவசரத்துடன் விசாரிப்பானேன்? ஒருவேளை ......? இருக்கும். ஏதோ இவர்களுக்குள் நெருங்கிய தொடர்பிருக்கவேண்டும். கட்டாயம் காதல்தான்!...... இவனை எப்படிச் சரிக்கட்டுவது என்று தவித்துக்கொண்டிருந்த அவனுக்குப் பெரிய மரக்கலம் — லூஸி — கிடைத்து விட்டது. இனிவெற்றிதான்!

டாக்காவின் பிரதம அதிகாரி கொலைசெய்யப் பட்டார் அவனது குழுவினரால். ஆகவே அவனுக்குக் காரியம் எளிது. இவனோ வயதில் இளைஞன், யாரென்று புரியவில்லை! ஒருவேளை திவானாக இருக்கலாம். எப்படியாயினும் இவன் தக்க பதவியாளன் என்று திட்டமாகத் தெரிகிறது. கிளையர்களைக் கட்டுப்படுத்த— கட்டுப் படுத்த என்ன, தட்டிவிடவும் சக்தியுள்ள 'காந்தக் கற்கள்' ஏராளமாக ரகவாரியாக உள்ளனவே! இப்பொழுது கேட்டபெயர் கிடைப்பதற்கு மிகவும் எளிது. வெள்ளைக்காரி—தொட்டால் துவளும் கூட்டத்தினள் அல்லள், தொட்டுத் தொட்டு ஆண்க

ளைத் துகள் துகளாக்கிவிடும் சக்தி—வசீகரப் பார்வை, கொல்லும் குலுக்குச் சிரிப்பு, கவரும் நடை......இவைகளின் உருவில்—உண்டு அவர்களிடம்! அதனைக்கண்டு ஏமாந்துவிட்டான் இந்தப் பித்தன்.

அலிவர்திகானிடம் இட்ட தூபம் காரியம் சாதிக்கவில்லை அதற்குள் அவனையே கருக்கிவிட்டான்! இப்பொழுது வந்துள்ள ஸுராஜ்-உத்-தௌலா அவனின் நேர் எதிரி—மகா துட்டன், வெகுகெட்டவன்! அவனை நெருங்குவதே கடினமாகத்தானிருக்கிறது......என்ன செய்யலாம்? சாணக்கியர் எழுதிய அர்த்த சாஸ்திரம்படித்த அவனுக்கு யோசனைகளுக்குப் பஞ்சமேது?

"திவான்ஜி"

"நான் திவானல்லவே. அவரின் மகன்" அவன் ஆள் யாரென்றுபுரிந்துகொண்டான் இனி எப்படியும் தாயத்தார்களுக்குள் முட்டிக்கொள்ளச் செய்யவேண்டும். இதற்கு ஏதாவது வழியுண்டா? வெள்ளையர்களுடன் தகராறு முற்ற வேண்டும். இதற்கு தக்கதோர் பாதை......இப்படி ஆராய்ந்து கொண்டிருந்த அவனுக்கு லூஸி கிடைத்தாள். கிடைத்ததைவிட்டுவிட அவன் அவ்வளவு ஏமாந்தவனா?

"ஹீ ஹி ஹி ......"

அமீன்சந்தின் வழக்கமான வஞ்சகச் சிரிப்பு!

"என்ன சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டான். கிஷோனிதாஸுக்கு ஒரு புது வகையான உணர்ச்சி.....வேசிகள் வீட்டுத் தரகர்கள் சிரிப்பு இப்படித்தானிருக்கும்! அதனைக் கேட்டுப் பழக்கப்பட்டதால் அவனுக்குத் தானே சிரிப்பு வந்தது.

"தாங்கள் மகாப்பிரபு" என்று பல்லவியைத் தொடங்கினான். அதன் வளர்ச்சி...?

"ஆமாம், அவளுக்கு உங்கள் மீது கட்டுக்கடங்காத ஆசை. தங்களை நினைக்கும் பொழுதெல்லாம் நீர் திரளுகிறது அவள் கண்களில்! ஆனால் அவள் உயர்ந்த பணியாளன் ஒருவனின் மனைவி..."

"என்ன என்மீது! அவளுக்கு ஆசையா? இது உண்மையா?"

"இல்லாவிட்டாள் என்னை அனுப்புவாளா?"

"என்ன ஆச்சர்யம்..."

"ஆச்சர்யம் ஏது சுவாமி, எல்லாம் அவன் செயல்"

"ஓய் காதல் கட்டத்தில் கடவுளை இழுக்காதீர்"

"மன்னிக்கவேண்டும். அவள் எப்படியும் தங்களைக் கல்கத்தாவிற்கு வரச் சொல்கிறாள்"

"வந்தால்?"

"இதுகூடவா சொல்லவேண்டும்! அவள் இன்பக் களஞ்சியமாவாள்!"

கிஷோனிதாஸ் முகத்தில் ஒரு மின்னல் தோன்றிமறைந்தது. ஆனால் அமீன்சந்த் அமைதியாக அவன் முகத்தின் பாவங்களைப் படித்துக்கொண்டிருந்தான்.

"கல்கத்தாவுக்கு நான் வருவதா? மாண்டவரின் சொத்துக்களைச் சுபேதாரிடம் ஒப்புவிக்க வேண்டிய நான் இடையிலேயே நின்றுவிடுவதா?—இது முடியாது"

"ஏன்?..."

"இந்தச் சேதி சுபேதாருக்குத் தெரிந்தால் ஆபத்து"

அமீன்சந்த் விழித்துக் கொண்டான். சரியான பிடி கிடைத்துவிட்டது. இஷோனி தாஸ் கட்டாயம் கல்கத்தா வந்துதான் ஆக வேண்டும். ஸுராஜ் கோபங் கொள்ளவேண்டும். இது அவன் திட்டம்! ஆகவே சற்று யோசிப்பவன் போல நின்று கொண்டிருந்தான்:

"உங்களை வெள்ளை வணிகர் களே கட்டாயப்படுத்திக் கொண்டு சென்றால்..."

"ஆமாம் நல்ல ஏற்பாடுதான். வெளியுலகுக்கு நான் நல்லவ ஞகவே இருப்பேன். ஆனால்..."

"காரியம் எப்படி முடியும்" என்ற கவலையா? அதற்கு நானிருக்கிறேன்."

"மிகவும் மகிழ்ச்சி. உமக்கு என் நன்றி, இதய பூர்வமான வணக்கம்"

திருமணம்

துறையூர்த் திரு நா. கோ. பொட்டி செட்டியாரின் புதல் வர்கள் திருமிகு சுந்தரம்—கம லம், சாரங்கபாணி—கமலம் திருமணங்கள் சீர்திருத்த முறையில் 4—9—49 ஞாயிற் றுக்கிழமை யன்று இவ்வூர் பாரதிதியேட்டரில் 'பொன்னி' ஆசிரியர் முருகு சுப்பிரமணி யன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றன; அவ்வமயம் மணமக்களை வாழ்த்தித் தோழர்கள் பாப் பையன், வழக்கறிஞர் ரெங்க சாமி, பெரியசாமி, லெட்சு மணய்யா ஆகியோர் சொற் பொழிவாற்றினர்.

இஷோனிதாஸ் வணக்கம் செலுத்தினன். அமீன்சந்த் விடைபெற்றான். அவன் கையி லே ஒரு முத்துமாலை இருந் தது. அவன்போட்ட திட்டம் நிறைவேறிக்கொண்டே வந் தது. டாககாவிற்கு எந்தமுடி வான திட்டத்துடனும் வர வில்லை. சென்றால் ஏதேனும் செய்யலாம் என்று எண்ணி னன். ஆகவே வந்தான். வந்து கொண்டிருக்கையிலே ஒரு பெரிய திட்டமிட்டான. ஆனல் அதை எப்படிச்சாதிப் பது? இதுதான் அவனுக்குப் புரியாமலிருந்தது. தானே புரிய வைத்துவிட்டான் இஷோனி தாஸ். தூண்டிலிலே தானே வந்துசிக்கிக்கொள்ளுமீனபோ லானன்-அமீனசந்த தூண்டில் காரனை! சுபேதாருக்கு இனி எப்படி வேண்டுமானலும் 'கயிறுதிரித்து'க் கடிதம் திட்ட லாம்!

இஷோனிதாஸ் எப்படியும் கல்கத்தா வரப்போகிறான். இந்தச் செய்தியை உடன் ஸுராஜ்-உத்-தெளலாவுக்குத் தெரிவித்துவிட எண்ணினன், சற்று விபரீதம் கலந்த வகை யில்! அவன் சினம் சாதாரண மானதல்ல — உடனே படை யெடுப்புத்தான்! இரண்டு பகைவர்களும் முட்டிக்கொள் வார்கள்!.........

கூடவே வந்த வேலைக்கார னிடம் 'ஜோம் சந்த்' என்று கூறினன். அவனும் அதையே திருப்பிச் சொன்னன். இருவ ரும் வணக்கந் தெரிவித்துக் கொண்டனர். முத்துமாலையை அவனிடம்கொடுத்தான். பிறகு அவன் சென்றுவிட்டான்.

"ஹி ஹி ஹி........."

அமீன்சந்த் சிரித்தான்.

[தொடரும்]



ஐயா திரு உல்லாசம் அவர்களுக்கு

13. என் பெரியப்பா

சமீபத்தில் என் உள்ளத்தை உலுக்கிவிட்ட சம்பவம் ஒன்று நடந்து விட்டது. அந்தச் சம்பவம் என்னைக் கெடுப்பதற்கென்றே, என் லட்சியத்தைக் குலைப்பதற்கென்றே செய்யப்பட்டது என்று அறிந்தபொழுது என் தேகம் பதறியது. கண்கள் — எதற்குமே கண்ணீரைச் சிந்தாத என் கண்கள்—என் தந்தை இறந்தபோதுகூடக் கண்ணீரைச் சிந்தாமல் 'கல்நெஞ்சன்' என்ற பெயரை வாங்கிக்கொடுத்த என் கண்கள் — கண்ணீரைச் சிந்தின. வேண்டுமென்றே செய்யப்பட்ட அந்தக்கொடுமை என்னை மிகவும் வேதனைக்குள்ளாக்கி விட்டது.

சமூக முன்னேற்றம், சீர்திருத்தம், ஜனநாயகம் என்றெல்லாம் உமக்கு நான் எழுதி வருகிறேன். என் ஜீவ லட்சியமாக, லட்சிய உறுதியாக அதைக்கொண்டு இதுகாறும் உழைத்து வந்திருக்கிறேன். ஆனால் இன்று என் வாழ்க்கையில் ஏற்பட்ட இடி — "ஐயா! ஐயா" என்று என்னால் அன்புடன் அழைக்கப்பட்டு வந்தவர் —எனக்குச் செய்த துரோகம் — எனக்கிழைத்த அவமானம் — நினைத்தாலே உடம்பு நடுங்குகிறது.

'என் தொண்டு ஜீவ நதி போல் ஒரே வேகத்தில் ஓடிக்கொண்டிருக்க வேண்டும். சீக்கிரத்திலேயே லட்சியம் என்ற சமுத்திரத்தை அடைய வேண்டும்' என்று சதா கனவு கண்டு கொண்டிருந்தேன். இடையிடையே நதியின் வேகத்தைத் தடுக்க, நதியின் ஓட்டத்தை நிறுத்த, அணைகள்போடப்பட்டன. ஆனால் அவையெல்லாம், என் லட்சிய வெறி கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்ததால் கரைந்து விட்டன.

அணைபோட்டுத் தடுக்க முடியாது என்று கண்டபின், நீரையே அசுத்தப்படுத்தி விட்டார் என் பெரியப்பா. என் தொண்டுக்கே மாசு கற்பித்து விட்டார் என் பெரியப்பா! காவேரியின் வெள்ளத்திலே கடும் விஷத்தைக் கலந்து விட்டார் என் பெரியப்பா!

"யார் அந்தப் பெரியப்பா?" என்கிறீர்களா? ஆம். இனி நான் கூறித்தான் தீரவேண்டும். கூறாவிட்டால், அவமானம் என்ற புழு என்னை அரித்துத் தின்றுவிடும். அவரால் என் நெஞ்சிலே ஏற்பட்ட புண் என்னை அழுத்திக் கொன்றுவிடும். ஆகவே கூறிவிடுகிறேன்.

என் தந்தைக்கு நேர் மூத்தவர் என் பெரியப்பா. இருவரும் ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகள் தான். ஒரே அளவு கல்வி கற்றவர்கள் தான். இருந்தாலும், பணக்காரன் ஏழை என்ற பாகுபாடு, சூழ்ச்சி, வஞ்சகம், ஈவிரக்கமற்ற தன்மை ஆகியவற்றால் தான் உண்டாகிறது என்பதற்கு உதாரணமாக விளங்கினார் என் பெரியப்பா. என் பாட்டனாரின் சொத்திலே பெரும்பகுதி என் பெரியப்பா கைக்குப் போய் விட்டது. குமண பரம்பரைக் குணம் படைத்த என் தந்தை, இந்தச் சூழ்ச்சியை, வஞ்சகத்தைப் பொருட்படுத்தவே இல்லையாம். அண்ணன் தானே என்ற தாராள மனது — அன்பு என்ற பாசவெறி — இவற்றால் என் தந்தை பேசாமல் இருந்து விட்டாராம்.

நாளடைவிலே, என் தந்தைக்கு நான் பிறந்தேன், ஒரே மகனாக. ஊரார்களுக்கு அள்ளிக் கொடுத்தது போக, உடன் பிறந்தான் அள்ளிக் கொண்டதுபோக, கடைசியாக அவர் எனக்கு வைத்துவிட்டுப் போன ஆஸ்திகள் அவருடைய அறிவுரைகள் — அனுபவச் சுரங்கத்திலே வெட்டியெடுக்கப் பட்ட தங்கக் கட்டிகள் — அவ்வளவுதான்.

என் பெரியப்பா அடுத்தடுத்து இரண்டு முறை கல்யாணம் செய்தும் குழந்தைப் பேறு பெறவில்லை. மகவு இல்லாத குறை அவர் மனதை மிகவும் புண்படுத்தியது. வேதனையால் தேகம் மெலியலானார். 'புத்' என்று ஒரு நரகம் இருக்கிறதாமே, அதிலே பொத்தென்று விழுந்து விடாமல் காப்பாற்ற ஒரு புத்திரன் வேண்டும் என்று தவியாய்த் தவித்தார். இந்த நிலையில் அவரது இரண்டாம் மனைவியும் மாரடைப்பினால் இறந்து போகவே, அவர்பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல. கவலை அவர் நெஞ்சிலே, குழி தோண்ட ஆரம்பித்தது.

மூன்றாவது கல்யாணம் என்ற யோசனை முளைத்தது. இதற்கு எத்தனையோ முக்கியஸ்தர்கள் முக்கிய பாகம் ஏற்றார்கள். அவருடைய ஏராளமான பணமும் அதற்குப் பாதை வகுத்துக்கொடுத்தது. ஆனால் என் பெரியப்பா கலியாணம் செய்து கொள்ள மறுத்துவிட்டார். ஏன் தெரியுமா? அப்போது நான் சின்னஞ் சிறு பையனாக இருந்தேன். அப்போதே "நல்ல பிள்ளை" என்ற பெயரைப் பலரிடமும் பெற்றிருந்தேன். என்னைப் பார்த்த பிறகுதான் என் பெரியப்பா தனது மூன்றாவது திருமணத்தை ரத்து செய்துவிட்டு, என்னைத் 'தத்து' (ஸ்வீகாரம்) எடுத்துக்கொள்வதாக என் அப்பாவிடம் கூறினார். என் அப்பாவித் தந்தையும் 'ஆகட்டும்' என்று கூறிவிட்டாராம. ஆனாலும் என் தந்தை இருக்கு மட்டும் நான் அவருடைய சுவாதீனத்தில்தான் இருந்து வந்தேன்.

என் தந்தையின் உயிர் முடிந்தது. என் கல்லூரி வாழ்க்கையும் முடிந்தது. என்னுடைய கார்டியனைத் தன்னைப் பதிவு செய்து கொண்டார் என் பெரியப்பா. இனி நான் அவருடைய சுவாதீனம். அப்போது அவருக்கு, வயது எழுபது.

கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்பொழுதே என் உள்ளம சமதர்மபுரியிலே உலாவிக் கொண்டிருந்தது. கண்கள் ஜனநாயகக் கட்சிகளைக் கண்டு கொண்டிருக்கும். கருத்து சமுதாயப் புரட்சியைப் பற்றிக் கனவு கண்டு கொண்டிருக்கும. என் லட்சியக்கனவுக்கு அப்பொழுதே உருவம் கொடுத்து அழகு பார்த்துக் கொண்டிருந்தேன்.

என் தந்தை இறந்தார். தம்பியின் பிடி தன்னிடம் வந்ததென்று என் பெரியப்பா நினைத்தார். இலட்சியப் பாதையிலே இறங்காதபடி என்னைக் கட்டியிருந்த கடைசித் தளை அறுந்தது என்று நான் கருதினேன. என்னைப் பெரிய சிமானாக்கிவிடவேண்டும் என்று எண்ணினார் என் பெரியப்பா. சிமான்களைத் தரைமட்டமாக்க வேண்டும் என்று சிறினேன் நான். அவர் வடதிசையைப் பார்த்தார். நான் தென் திசையைப் பார்த்தேன. அவருக்கும் எனக்கும் இடையே பெரிய இமயமலை இருந்தது.

"தம்பி, இனிமேல் நீ படித்ததுபோதும்" என்றார்.

"ஆகட்டும் அப்பா! உலகம் என்ற பெரிய சர்வகலாசாலையில் இருந்து படிப்பதை விட்டுவிட்டு, குறுகிய இடத்திலே இருந்து கொண்டு குறிப்பிட்ட புத்தகங்களை மட்டும் படிப்பதிலே பயனில்லை அப்பா!"

"அதுசரி, இனிமேல் நீ வீட்டு நிர்வாகத்தை ஏற்று நடத்த வேண்டும்" என்றார்.

"ஆனல் அது முடியாது அப்பா, நான் நாட்டு நிர்வாகத்தைச் சீர்திருத்தப் போகிறேன்"

"என்ன?" என்றார் பதட்டத்துடன்.

"பதறாதீர்கள் அப்பா! நாட்டுக்கு உழைக்கப்போகிறேன்"

"நாடு உன்னை அழைக்கிறதோ?" என்றார் கோபத்துடன்.

"இல்லையப்பா, நான் அழைக்கிறேன் நாட்டை, நான் காட்டும் பாதைக்கு" என்றேன்.

"நான் உன்னைத் 'தத்து' எடுத்திருக்கிறேன் தெரியுமா?" என்றார்.

"என்னை நாட்டுக்குத்தத்தம் செய்துவிட்டேன் அப்பா. இதை உங்களால் தடுக்க முடியாது" என்றேன் நான்.

அவர் சினந்தார். நான் சிரித்தேன். "பொடியன் ஏதோ புலம்புகிருன்" என்று அவர் போயிருக்க வேண்டும். நானும் 'கிழம்' தானே என்றுவிட்டுவிட்டுச் சீர்திருத்தத் தொண்டிலே இறங்கினேன். பட்டி பட்டியாகச் சுற்றினேன். என் லட்சிய விதைகளைத் தூவினேன். விதைகள் வேரூன்றின. நாற்றுக்கள் கிளம்பின. மக்களின் நெஞ்சமென்னும் நஞ்சை நிலத்திலே நான் தூவிய நல்விதைகள் செழித்தோங்கி வளரத் தொடங்கின. எனக்கு வெற்றி மேல் வெற்றி! புகழுக்குமேல் புகழ்! என் பெரியப்பாவுக்கோ

இடிமேல் இடி! கவலைக்குமேல் கவலை!!

என்னைச் சீமானுக்கி விட வேண்டும் என்று படாதபாடு பட்டார், பத்துலட்சம் ரூபாய்ச் சொத்துக்கு என்னைச் சொந்தகாரனுக்கி விட்டு 'புத்' என்ற நரகத்திலிருந்து தப்பித்துக் கொள்ளப் படாதபாடு பட்டார். நானே சீமான்களைக் கண்டால் சீறினேன். ஜரிகைக் குல்லாய்களைச் சாடினேன். உல்லாசங்களின் அட்டுழியங்களை முச்சந்திக்குக் கொண்டு வந்து நிறுத்தினேன்.

நான் நாட்டு மக்களுக்குச் செய்து வந்த ஒவ்வொரு நற்காரியமும் என் பெரியப்பாவுக்குத் தேள் கொட்டியதுபோல் இருந்தது. மக்களுக்காக நான் செய்யும் தொண்டு அவருக்கு வெடிகுண்டாக அமைந்தது. ஏனென்ருல் அவர் வைதிகபுரியின் சர்வாதிகாரி, பாட்டாளிகளின் பரம விரோதி—உல்லாசங்களின் சல்லாபத் தோழர்.

மீண்டும் வந்தார், ஜீவநதியின் ஓட்டத்தைத் தடுக்க, மற்ருெரு கூடையும், களிமண்ணுமாக.

''திருமணம் செய்துகொள்'' என்ருர்.

''எனக்கு லட்சியம்தான் திருமணம்'' என்றேன்.

''கெட்டுப் போகாதேடா'' என்ருர்.

''மாட்டேன். உங்கள் வலையில் விழாதவரைக்கும் நான் நான் கெட்டுப்போக மாட்டேன்''

''அடேய்! நான் கிழவன்—என் மனதைப் புண்ணுக்காதே நான் சொல்வதைக் கேள்'' என்ருர்.

''அப்பா! வாலிபனின் உள்ளத் துடிப்பை உங்களால் அறிய முடியாது. இளங்காளையின் இருதய வேகத்தை உங்களால் உணர முடியாது. உணர்ந்துகொண்டாலும், உங்களால் அதைத் தாங்க முடியாது'' என்றேன்.

''சொத்து — பத்துலட்சம் ரூபாய் —பாழாய்ப்போகுமடா'' என்ருர்.

''பத்துலட்சம் ரூபாய் —பள்ளிக்கூடம கட்டுங்களப்பா''என்றேன.

''அதைவிடக் குப்பையில் போடுவேன்'' என்ருர் கோபத்துடன.

''செய்யுங்கள்'' என்று கூறிவிட்டு நான் வெளியே சென்றுவிட்டேன். பொதுக் காரியங்களுக்காக ஊர் ஊராகச்சுற்றினேன். பல பட்டிக்காடுகளைப் பார்த்தேன். ஆறுமாதங்கள ஓயாத உழைப்பு!

ஒருநாள் வீடு திரும்பினேன். வீட்டில் புதிதாக ஒரு பெண்மணி காணப்பட்டாள. அந்த அமமணி யாரெனறு அறிய ஆசைபபட்டேன. அவளுக்கு வயது இருபத்தியைந்துககுள் மதிபபிடலாம். இன்னும கன்னி கழியாத பருவம்!

''யார் நீங்கள?'' என்றேன்''

''வேலைக்காரி'' என்ருள்.

''முன்பு ஒரு கிழவி இருந்தாளே?'' என்றேன்.

'எனக்குத் தெரியாது. நான் வந்து ஆறுமாதங்கள் ஆகின்றன, அப்பாவுக்குச் சமையல் செய்வது—இன்னும் சில்லறை வேலைகள் – எல்லாவற்றிற்கும் நான்தான்'' என்ருள்.

"வேலைக்காரி மட்டுமல்ல, சமையற்காரியும் கூட" என்று எண்ணிக்கொண்டே என் அறைக்குள் நுழைந்தேன். அங்கே என் பெரியப்பா இருந்தார். "உட்கார்" என்றார். உட்கார்ந்தேன்.

"நாளெல்லாம் சீர்திருத்தம் பேசுகின்றாயல்லவா?" என்றார்.

"ஆமாம்"

"பணக்காரன்—ஏழை என்ற பாகுபாடு இருக்கக்கூடாது?"

"ஆமாம்"

"உயர்சாதி— கீழ்ச்சாதி என்ற எண்ணம் ஒழிய வேண்டும்?"

"ஆமாம் பெரியப்பா! ஆமாம்"

"சரி, இதைக்கேள். வரும் போது நீ பார்த்தாயல்லவா அந்தப் பெண்ணை! அவள் ஒரு அனாதை! நம்ஜாதியல்ல! அரைக்காசுகூட அவளுக்குச் சொந்தமாகக் கிடையாது. நீ அவளைத் திருமணம் செய்து கொண்டுவிடு, உன் கொள்கைகள் எல்லாம் தானாக நிறைவேறி விடும். என் ஆசையும பூர்த்தியாகி விடும" என்றார்.

"சரிதான் நீங்கள் வலைவீசும் படலம் மிகவும் நாசுக்காக இருக்கிறது" என்றேன்.

"விளையாட்டல்ல—என் கடைசி வேண்டுகோள்"

"உங்கள் கடைசி ஆயுதமும் பயனற்றுப் போய்விட்டதப்பா"

"கலப்பு மணம் வேண்டுமென்று வீறுப்புப் பேசுகிறாய்"

"கட்டாய மணம் கூடாது என்றும் சொல்கிறேனப்பா"

அவர் என்ன எண்ணினாரோ சட்டென்று அறையைவிட்டு வெளியேறி விட்டார். நான் என் வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தேன்.

வீட்டின் வேலைக்காரியாக இருந்த அந்த அம்மணி எப்போதும் பெரியப்பாவின் அருகிலேயே இருந்தாள். "அப்பா! அப்பா!!" என்று அன்பு குழையப் பேசினாள். நான் என் சகோதரிபோல் அவளைக் கருதினேன்—ஆனால் அந்தச் சமையற்காரி—இல்லை சாகஸக்காரி வீட்டின் சர்வாதிகாரியாக மாறிக் கொண்டு வந்தாள், ஆனால் இந்தச்சிறிய விஷயத்தில் என் சிந்தையைச் செலவிட விரும்பாமல்,என் பொதுத் தொண்டில் இறங்கினேன்.

திடீரென்று ஒரு நாள் ஒரு செய்திகேட்டுத் திடுக்கிட்டேன். என்னால் நம்பமுடியவில்லை. பெரியப்பா என்னைப் பழிவாங்கத் திட்ட மிட்டிருக்கிறார்—இது தான் செய்தி.

எழுபத்தியைந்து வயது நிரம்பிய கிழம்—வீட்டில் ஒரு காலும், சுடுகாட்டில் ஒருகாலுமாக இருக்கும் வயது. இவரால் என் உயிருக்கு ஆபத்து விளைவிக்க முடியாது. மேலும், இப்பொழுது அந்த ரகசியம் எப்படியோ எனக்குத் தெரிவிக்கப் பட்டு, நானும் உஷார்ப்படுத்தப் பட்டுவிட்டேன்.



ஆனாலும், பழிவாங்குதல் என்ற கதையை என்னால் நம்ப முடியவில்லை! அவருக்கு நான் என்ன கேடுசெய்தேன்? ஒன்றும் இல்லை! அப்படியே அவருக்கு அந்த எண்ணம் இருந்திருக்குமானால் என் சாப்பாட்டிலே விஷத்தை வைத்து என்னைக் கொன்றிருக்கலாம்; அவரது அடி ஆட்களை ஏவிவிட்டு என்னைக் கொலை செய்திருக்கலாம். ஆனால் அப்படியெல்லாம் ஒன்றும் இதுவரை நடக்கவே இல்லை. அவருடைய பழிவாங்கும் படலம எனக்குப் புரியாத புதிராகவே இருந்தது.

ஆம். புரியாத புதிர்தான். விலகாத திரைதான். சீக்கிரத்திலேயே திரைவிலகியது.

புதிரும்புரிந்தது. அவர் என்னைப் பழிவாங்கக் கத்தி தீட்டவில்லை; கட்டாரி எடுக்கவில்லை; விஷம் தேடவில்லை; துப்பாக்கியைத் தொடவில்லை. ஆனால்... புத்தி தீட்டினார். அறிவைக் கூராக்கினார். சரியானபடி யோசித்து, சமத்காரமாக 'அறிக்கைகள் விட்டு ஒரு ஏற்பாடு' என்றபெயரால் என் லட்சியக் கோட்டைக்கு என் மான உணர்ச்சிக்கு, என் மனச்சாட்சிக்குப் பீரங்கிக் குழாயைத் திருப்பி வைத்துவிட்டார்.

அந்த ஏற்பாடு என்ன தெரியுமா? அதுதான் அவருடைய திருமணம். மணமகள் வேறு யாருமல்ல! அந்தச் சமையற்காரி அம்மணியுடன் தான்.

எழுபத்தைந்தாவது வயதிலே திருமணம்!

இருபத்தியைந்து வயதான நங்கையுடன் திருமணம்!

எழுபத்தைந்தும் இருபத்தைந்து!!

என் லட்சியக் கோட்டையைத் தரைமட்டமாக்க அவர் தயாரித்த வெடிகுண்டு! காய்த்துப் பலன் தரும் நிலையிலுள்ள கதிரை நாசமாக்க அவர் மூட்டிய தீ! கரும்புத் தோட்டத்துக்குள் ஏவிவிடப்பட்ட காட்டான்! அதுதான அவரது திருமணம்.

பத்துலட்சம் ரூபாயைப் பாதுகாப்பதற்கு (வார்சுக்காக) மட்டுமே அவர் அந்தப் பாவையைத் திருமணம செய்து கொள்ளவில்லை. வேண்டுமானால் அந்த அம்மணி, பத்து லட்சம் ரூபாய்க்கு ஆசைப்பட்டு, கிழவனைக் கல்யாணம் செய்திருககலாம். ஆனால் பெரியப்பாவினுடைய நோக்கமெல்லாம் என கொள்கையை வேரறுப்பது—என் லட்சியத்தைச் சிதைப்பது—என்னை நாசமாக்குவது—இதற்கு ஒரு ஏற்பாடு—அதன் பெயர்தான் திருமணம்!

அவரிடம் கெஞ்சினேன், கதறினேன், அவர் கால்களைக் கட்டிக்கொண்டு அழுதேன்.

"அப்பா! வேண்டாம் இந்த விபரீத ஏற்பாடு" என்றேன்.

"என்னடா, எதடா விபரீதம்?" என்றார்.

"அக்கரமம்—இது அடுக்காதப்பா" எனறேன்

"எதுடா அக்கிரமம்?" காதல் மணம், கலப்புமணம் என்று நீ தானடா ஊருக்கு உபதேசிக்கிறாய்?"

"ஆமாம் அப்பா, காதல் மணம், கலப்பு மணம் வேண்டுமென்று ஊருக்கு உபதேசித்தேன். 'ஆனால் எழுபத்தைந்துக்கும் இருபத்தைந்துக்கும்' உபதேசிக்க வில்லை அப்பா! இந்த ஏற்பாட்டை விட்டு விடுங்கள்" என்றுகதறினேன்.

"முடியாது"

"என் மானத்துக்காக நம் குடும்பத்தின் மானத்துக்காக விட்டுவிடுங்கள் அப்பா' என்று துடித்தேன்.

"உனக்காக, அன்று என் மூன்ருவது திருமணத்தை ரத்து செய்தேன். இன்று, அதே உனக்காக, உன் மானத்தை வாங்குவதற்காகவே, என் மூன்ருவது கல்யாணத்தை முடித்துக் கொள்கிறேன்."

"அப்பா, ஊரார்கள் நகைப்பார்கள் அப்பா" என்றேன் அழுதுகொண்டே

"ஊரார் நகைக்கட்டும். அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை! ஆனால் நீ அழுவாயல்லவா? அழு! நன்ருக அழு! மூலையில்போய் முக்காடிட்டுக் கொண்டு அழு!!"

"கல் நெஞ்சமா உமக்கு?" என்று கதறினேன்.

"நெக்கு விடாத எஃகு நெஞ்சு! அன்று நான் மனக் கோட்டைகட்டினேன்! உன்னைச் சீமானக்கி, என் செல்வத்துக்கு உன்னை அதிபதியாக்கி, என் கண்ணாரக் கண்டு களிக்க எண்ணினேன். நீயோ, சீமான்களை விரட்டினுய். என் செல்வந்தச் சிநேகிதர்களை வெறுத்தாய். நாடோடியைப் போல நாடுசுற்ற ஆரம்பித்தாய். என் சொல்லைத் தட்டிப் பேசினுய். எனக்கு நீ கீழ்ப்படிய வில்லை. உன்னைப் பழிவாங்க இதை விட வேறு சிறந்த வழிகிடையாது. ஆகவே ஏற்பாட்டைக் கைவிட முடியாது"

"பழிவாங்கும் அளவுக்கு நான் என்ன பெரிய குற்றம் செய்துவிட்டேன் அப்பா?"

"மூட்டாளே! நீ செய்த குற்றமெல்லாம் சிறியது என்று நினைத்துக் கொண்டிருக்கிருயா? கேள் என் அந்தரங்க ஆசையை நிராசையாக்கிஞய்—பணக்காரன்—ஏழை என்றெல்லாம் ஊரிலே பறை சாற்றிஞய். என்று நீ சீமான்களை விரட்ட ஆரம்பித்தாயோ, அன்றிலிருந்து, உன்ஞல் என் புகழ், கீர்த்தி, பெருமை எல்லாம் குறைய ஆரம்பித்தது. என்று நீ என்சொல்லுக்குக் கீழ்ப்படிய மறுத்தாயோ அன்றே உன்மேல் எனக்கு நம்பிக்கை இல்லை. ஊருக்கு நீ நல்ல பிள்ளையாஞலும் எனக்கு நீ கெட்ட பிள்ளைதான்"

கடைசியில் அவர் திருமணத்தை முடித்துக்கொண்டார். நாடெங்கும் பரபரப்பு. சீர்திருத்தவாதியின் தந்தைக்குத் திருமணமாம். பொருந்தா மணத்தைப்பற்றிப் பேசிவரும் புரட்சிவீரன் இதைத் தடுக்க முடியவில்லை. கிழவனுக்கும் குமரிக்கும் கல்யாணம். இந்தக் கோலாகலத்தை நிறுத்தச் சீர்திருத்தவாதிக்கு வக்கில்லை! உடம்பிலே ரணத்தை வைத்துக் கொண்டு, ஊருக்கு வைத்தியம் செய்யவந்துவிட்டான் - இப்படிக் கண்டனங்கள்—கணைகள் ரூபத்தில் வந்து என் நெஞ்சைத் தைக்கின்றன. எதிரிகளின் ஏசலை என்ஞல் பொறுக்க முடியவில்லை.

"ஏம்பா! சீர்திருத்தம்! என்ன இது? கிழவன்—குமரி பிளடானிக் மாரேஜ்!" என்று என்னைப் பார்த்து கையாண்டிசெய்கின்றனர்.

என் இலட்சியத்திற்கு அவமானத்தை தேடிவைத்துவிட்டார். பெற்ற தகப்பனைக்காட்டிலும் பிரியமாக, அப்பா அப்பா என்றுகிடந்த எனக்குக் கொடுமை செய்துவிட்டார் என்னை நாசமாக்கிவிட்டார். நீங்காத பழியை என்மேல் வைத்துவிட்டார். என் சர்வ அங்கமும் குன்றிப்போய்விட்டது. நெஞ்சிலே இரும்புப் பாரம் ஏற்றப்பட்டுவிட்டது.

அழுதேன். விம்மி விம்மி அழுதேன். நன்ருக வாய்விட்டுக் கதறினேன் நாவறளும் வரைக்கும் ஓயாமல் ஓலமிட்டேன். பலன் என்ன? திருமணம் என்ற கொள்ளிக்கட்டையால் அவர் போட்டசூடு—அதஞல் ஏற்பட்ட வடு—இன்னும் மறையவில்லை. ஆஞல் பெரியப்பா? அவர் இருக்கிருர், நிலைகுலையாத மலையைப்போல!

வணக்கம்
வழிப்போக்கன்



ஒருவர்:- இவர்கள் எங்கே வெளியூர் செல்கிருர்களா?

மற்றவர்:- இல்லை; இங்கே சினிமாப்பார்க்க வந்திருக்காங்க.

வட மொழி இலக்கியம்

அறிஞர் கா. அப்பாத்துரை

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

வடமொழியின் பொற்காலம்
[5—7 நூற்றாண்டு]

வடமொழியின் முதற் கவிஞனான காளிதாசனே அதன் முதன்மைவாய்ந்த கவிஞனும் ஆவான். விக்கிரமாதித்தன் அரசவையிலிருந்த நவமணிகள் அல்லது ஒன்பது புலவர்களுள் அவன் முதல்வன் என்று மரபுரைக் கதைகள் கூறுகின்றன. ஆனால் இவ்வொன்பதின்மருள் சிலர் வேறு வேறு காலத்தவர் என்று அறிகிறோமாதலால் இம் மரபுரை வரலாற்றுவாய்மையுடையதென்று கொள்வதற்கில்லை. மேலும் விக்கிரமாதித்தியன் விக்கிரமாதித்ய சகாப்தம் தொடங்கும் காலமாகிய கி. மு. 1-ம் நூற்றாண்டினன் என்றுசிலரும் கி. பி. 5ம் நூற்றாண்டில் வாழ்ந்த இரண்டாம் சந்திரகுப்தன் என்று சிலரும் கூறு கின்றனர். இவற்றுள்பிற்பட்டகாலமே பெரும்பாலும் ஏற்கப்பட்டதாகும். காளிதாசன் நடையும் மொழிப் பண்பும் இக்காலத்திற்கே பொருத்தமானவை. வட மொழியின் பொற்காலமாகவும் புதியஆரிய (பிராமண அதாவது இந்து) சமயத்தின் பொற்காலமாகவும் கருதப்படும் காலமும் இதுவே. இதிகாச புராணங்கள், சுமிருதிகள், பிற கதம்ப நூல்கள் முதலிய பிற்கால வேதமொழி நூல்கள் இன்றையவடிவில் இறுதியுருவடைந்ததும் இப்போதுதான்.

வடமொழியின் சிறந்த இலக்கியத்துறைகளான நாடகம், பெருங் காவியம், சிறுகாவியம் அல்லது துறைப்பா ஆகிய மூன்றிலும் காளிதாசன் நூல்கள் இயற்றியதுடன் மூன்றுதுறைகளிலும் வடமொழிநூல்களுக்கு முன் மாதிரியாக முதன்மைபெற்றான். குமார சம்பவம், ரகுவம்சம் ஆகியபெருங் காவியங்களும் மேக சந்தேசம் என்ற தூதுத்துறை இலக்கியமும் மாளவிகாக்னி மித்திரம், விக்கிரமோர்வசீகம், அபிஜ்ஞான சாகுந்தலம் ஆகிய நாடகங்களும் அவன் இயற்றியவை. பெருங்காவியங்களில் தலைசிறந்தது இரகுவம்சம். இது இராமாயணக் கதை உட்பட இராமன் அரசமரபின் வரலாறு கூறுவது. இந்நூல் பல அரசர் வரலாற்று வடிவில் அமைந்ததாயினும் காளிதாசன் வர்ணனைச் சிறப்புக்களாலும், உணர்ச்சி வேறுபாடுகளாலும், பலவகைப்பட்ட பண்போவியங்களாலும் ஒரே தொடர்பான பல திரைக்காட்சிகளின் கோவைபோலத் தோன்றி இலக்கிய விருந்தாய் அமைந்துள்ளது. பார்வதி பரமசிவன் காதல் வாழ்வும் முருகன் பிறப்பும்கூறும் குமார சம்பவமும் இயற்கைக் காட்சி வர்ணனைகள் நிறைந்தது. மேக சந்தேசம் தூது காவியங்களில்

காலத்தாலும் தன்மையாலும் முதன்மையானது. இந்தியாவில் இத்துறைக் காவியங்கள் எல்லாவற்றுக்கும் இது முன்மாதிரியாயமைந்தது.

காளிதாசனுக்கு உலகப் புகழ் தந்தநூல் சாகுந்தலமே யாகும். 'காவியங்களுள் நாடகம் சிறந்தது; நாடகங்களிலும் சாகுந்தலம் சிறந்தது; அதிலும் நான்காம் அங்கம் நான்காம் பாட்டுக்கு இணையில்லை' ("காவ்யேஷு நாடகம் ரம்யம், தத்ரரம்யம் சாகுந்தலம்; தத்ராபிச சதுஷ்டோங்க: தத்ரச் லோகச் சதுஷ்டயம்") என்று வடமொழியாளர் இதனைப் புகழ்வர். காளிதாசர் நடை எளிமையும் இனிமையும் வாய்ந்ததாயினும் அணி நலன்கள் சிறந்து விளங்குகிறது. அவன் பெரும் சிறப்பு உவமை (உபமாகாளிதாசஸ்ய) எனப்படுகிறது. சாகுந்தலம் இந்தியாவில் மட்டுமன்றி மேனாடுகளிலும் புலவர்களால் உச்சிமேற்கொள்ளப்பட்டுப் பல மொழிகளிலும் மொழிபெயர்த்தாராயப்பட்டுள்ளது. தமிழில் பல மொழிபெயர்ப்புகள் உள்ளனவாயினும் வடமொழி தென்மொழி ஒப்புவமையாராய்ச்சி யுரையுடன் கூடிய ஆசிரியர் மறைமலையடிகளாரின் மொழி பெயர்ப்பே தலை சிறந்ததாகும்.

பாரவி

காளிதாசன் பெரும்புகழைப் பயன்படுத்திப் பல நூல்களும் அவன் பெயரால் இயங்குகின்றன. அவற்றுள் சிறந்த ஒரு நூல் ஆறு பர்வங்களை வர்ணிக்கும இருது சம்ஹாரம் என்ற சிறு காப்பியமே. கி. பி. 6-ம் நூற்றாண்டில் காஞ்சியில் வாழ்ந்த "பாரவி" விக்கிரமாதித்தியன் நவமணிகளுள் ஒருவனாகக் கூறப்படுபவன். இவன் இயற்றிய பெருங்காவியம் கிராதார்ஜுனியம் என்பது. இது அருச்சுனன் வேட உருவில் சிவபெருமானைச் சந்தித்த பாரதக் கதைப்பகுதி கூறுவது. உவமையில் காளிதாசன் என்பதுபோலவே பொருளாழத்தில் பாரவி (உபமாகாளிதாசஸ்ய, பாரவேர் அர்த்தகௌரவர்) என்று வடமொழியாளர் கூறுவர்.

பர்த்ருஹரி கிட்டத்தட்ட இதே காலத்தவனாகக் குறிப்பிடத்தக்க மற்றொரு புலவன் பர்த்ருஹரி. இவன் ஓர் அரசன் என்றும் மனைவி கற்பைச் சோதிக்கப்போய், சோதனையில் அக் கற்பரசியை இழந்து அவன் துறவியானதாகக் கதைகள் கூறும். இவன் எழுதிய நூல் வைராக்கியம் (துறவு அல்லது அறம்) நீதி (உலகியல் அல்லது பொருள்) சிருங்காரம் (காதல் அல்லது இன்பம்) ஆகிய மூன்று பகுதிகளுக்குள் ஒவ்வொன்றுக்கும் ஒரு நூறாகப் பாடப்பட்ட திரிசதகம (முந்நூறு பாடல்கள்) ஆகும். வடமொழியில் இத்தகைய திரிசதகங்கள் (முப்பால் நூறுகள்) பலவாயினும் இதுவே அவற்றுள் காலத்தாலும் சிறப்பாலும் முதன்மை வாய்ந்தது.

'முப்பால்' நூல்கள், வடமொழி தென்மொழி வேறுபாடுகள்

முப்பால் பாகுபாட்டில் இது திருவள்ளுவர் திருக்குறளை நினைவூட்டுவது. ஆயினும் தமிழர் முப்பால் பாகுபாட்டுக்கும்

வடவர் முப்பாற் பாகுபாட்டுக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு உண்டு என்பதை இந்நூல் காட்டும். வடமொழியாளரிடையே அறம் வெறுப்பை அடிப்படையாகக் கொண்ட துறவையும், பொருள் சூழ்ச்சியை அடிப்படையாகக் கொண்ட உலகியலையும். இன்பம் கீழ்த்தரமான சிற்றின்பக் கருத்துக்களையுமே குறித்தன. தமிழ் முறையிலோ மூன்றும் அன்பையும் அறிவையும் ஒப்புரவையும் அடிப்படையாகக் கொண்டவை. ஆயினும் திருவள்ளுவரைப்போலவே முரண்பட்ட திறங்களான இம் முப்பகுதியிலும் ஒத்த கவிதைச் சிறப்பு பர்த்ருஹரியிடமும் காணப்படுகிறது.

பட்டி காவியம்

இதே காலத்துக்குரிய மற்றொரு புலவன் வலபிநகரில் (கூர்ச்சரநாட்டில்) வாழ்ந்த பட்டி என்பவன். இவன் நூல் இராவணவதம் அல்லது பட்டி காவியம்எனற பெருங்காவியம். பிற்காலச் சொல்லணி பொருளணி நயங்கள் குறைந்து புராண நடையில் எழுதப்பட்ட வால்மீகி ராமாயணத்தை இலக்கியப் பண்புகளிலும் சுவைகளிலும் ஈடுபட்ட நற்புலவர் புறக்கணிப்பது கண்டு இப்புலவர் அக்கதையைக் காவிய அளவில் சுருக்கி அத்தகைய அணி நலன்களுடன் அமைத்ததாகக் கூறப்படுகிறது.

முதிர்ச்சிக் காலம்
(7-12 நூற்றுண்டு)

தமிழ், வடமொழி முற்கால பிற்கால இலக்கியங்கள்

காளிதாசன் கால வடமொழி இலக்கியம் ஓரளவு அதற்கு முற்பட்ட தமிழ்ச் சங்ககால இலக்கியப் பண்புகளை நினைப்பூட்டுவது. ஆனல் முதிர்ச்சிக்கால இலக்கியம் சிந்தாமணி, கம்பராமாயண காலத் தமிழிலக்கியத்தை (5-12ம் நூற்றுண்டு) நினைவூட்டுவது ஆகும். முன்னது எளிய நடையும இயற்கையணியும் செறிந்த கலைக் கட்டுக்கோப்பும் உடையது. பின்னதோ பாரிய தளர்ச்சியுற்ற விரிந்த கட்டுக்கோப்பும் கடுநடையும் செயற்கை வர்ணனையும் சொல்லடுக்கும் உடையது.

ஹர்ஷன்

7-ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் வடநாடு முழுவதையும் ஹர்ஷன் ஆட்சி செய்தான். இப் பேரரசன் புத்த சமயத்தினன் ஆயினும் பிற சமயங்களிடமும் ஒப்புரவுகாட்டினன். இவன் புலவர்களை ஆதரித்ததுடன் தானே ஒரு புலவனுயுமிருந்ததாகத் தெரிகிறது.பிரியதர்சிகை, இரத்தினுவளி, நாகானந்தம் என்ற மூன்று நாடகங்கள் அவனுல் இயற்றப்பட்டன. இரத்னுவளி உதயணனின் இரண்டாம் மணம் பற்றியது. நாகானந் தம் புத்த சமயச் சார்பான கதை. இந் நாடகங்களை ஹர்ஷன்பெயரால் அவன் அவைப் புலவனுன பாணனே இயற்றினன் என்பர் சிலர்.

மகேந்திர பல்லவன்

வடநாட்டில் பேரரசனுக ஹர்ஷன் ஆண்ட அதே காலத்தில் தமிழகத்தில் மகேந்திர பல்லவன் என்ற பேரரசன் ஆண்டுவந்தான். ஹர்ஷனையே போரில் எதிர்த்து நின்ற புலிகேசி என்ற இடைநாட்டுப் பேரரசனை வென்றடக்கிய

வீரன் இவன். இவன் சமண சமயத்தவனுயிருந்து திருநாவுக்கரசரால் சைவனுக்கப்பட்டான். சைவனுக்கபபடுமுன் புத்தர், பாசண்டர் ஆகிய காபாலிக சைவர் ஆகியவர் சமய வழக்கங்களைக் கடிந்து அவன் 'மத்தவிபாரப் பிரகாணம்' என்ற வகைப் பண்பு வாய்ந்த களி நாடகம் ஒன்று இயற்றினன். இது அண்மையில் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

பவபூதி

முதிர்ச்சி காலத்தில் மிகச் சிறப்புடைய நாடகக் கவிஞன் 8-ம் நூற்ருண்டில் வாழ்ந்த பவபூதியே. வடமொழியாளரிடையே இவன் பலரால் காளிதாசனுக்கு ஒப்பானவனுகவும் பலரால் சில கூறுகளில் காளிதாசனுக்கு மேம்பட்டவனுகவும் கொள்ளப்படுகிருன். மஹாவீர சரிதம், மாலதி மாதவம், உத்தரராம சரிதம் என்பவை இவன் எழுதிய நாடகங்கள். இவற்றுள் மாலதி மாதவம் ஷேக்ஸ்பியர் ரோமியோ ஜூலியட்டையும்பாரசிகலேலாமஜ்னூவையும் நினைவூட்டவல்லகாதற்கதை. வடமொழியில் கற்பனைப் புதுமையுடைய ஒன்றிரண்டு நூல்களில் இது இடம் பெறுவது. பவபூதியின் மற்ற இரு நாடகங்களும இராமாயணக் கதைபற்றிய நாடகங்கள். முதலது அரசுரிமை விழா வரையுள்ள முழுக் கதையும் பின்னது சிதைபிரிவும் காடுறை வாழ்வும் கூறுவது. உத்தரசரிதம் இவரது அருஞ்சிறப்புக்கள் யாவும் நிறைந்த உயர் நூல்.

காளிதாசனும் பவபூதியும்

வடமொழி நாடக இலக்கிய மாளிகையின் தலைக்கோபுரம் காளிதாசனுல் அதன் கடைக் கோபுரம் பவபூதி என்னலாம். காளிதாசன் சிறப்பு மொழி எல்லை கடந்து உலகப் புகழ்பெற்றது. பவபூதியினதோ வடமொழி யெல்லையில் புகழ்நிறுவிற்று. நடைநயமும் மொழியினிமையும் இயற்கை வனப்பும் காளிதாசன பண்புகள். பெருமித நடையும் சொல் முழக்கமும வீறுமிக்க பண்போவியங்களும் கலைக்கட்டுக்கோப்பும் பவபூதியின் சிறப்புக்கள் ஆகும்.

பவபூதிக்குப் பிற்பட்ட நாடக ஆசிரியர்களிடையே காளிதாசனின் இயற்கை நயமும் குறைவு; பவபூதியின் கட்டுக்கோப்பும் வீறும மறைந்தன. சொல்லடுக்குகளும் செயற்கையணிகளும சமயச் சார்பான விளம்பரங்களுமே அவற்றிற்கு உயிரியக்கம் தந்தன.

'முத்ரா ராக்ஷசம்'

8-ம் நூற்ருண்டில் விசாகதத்தன் எழுதிய முத்ராராக்ஷஸம் வடமொழியில் வரலாறு தழுவிய நாடகமாகச் சிறப்படைந்துள்ளது. கடைசி நந்த அரசனின் அமைச்சனை இராக்ஷஸனின் சூழ்ச்சிகளைச் சந்திரகுப்தனின அமைச்சனுகக் குறிக்கபபடும் சாணக்கியன் எதிர்ச் சூழ்ச்சிகளால் சிதறடித்து அவனைச் சந்திர குப்தன் அமைச்சனுக்கும் திறத்தை விரித்துரைப்பது இந்நாடகம். நாட்டுப் பற்றும் அரசப்பற்றும் மாருநட்புறுதியும உடைய ராக்ஷஸனின் பண்போவியம் இந் நாடகத்தின் பெருஞ்சிறப்பாகும். சாணக்கியனைப்பற்றிய செய்திகள் முதல் முதல் இந்நாடகத்திலேயே காணப்படுகின்றன.

காளிதாசனுக்கு முற்பட்டவரான பாஸன் பெயரால் வெளியிடப்பட்டுள்ள திருவனந்தபுரம் நாடகங்கள் கி. பி. 9-ம் நூற்ருண்டில் மலையாள நாட்டில் வழங்கியிருக்கலாம் என்று எண்ண இடமுண்டு. பாஸனை தென்னுட்டவனுயிருக்கக் கூடுமாஞல் அவன் காளிதாசனுக்கு முற்பட்டு கி. பி. 2-ம் நூற்ருண்டில் இருந்தவனுகக் கொள்ளுதல்கூடப் பொருந்தக் கூடியதே.

ஆயினும் மலையாளத்தில் வடமொழியில் நாடகங்கள் எழுதப்பட்ட காலம் கி. பி. 12-ம் நூற்ருண்டுக்கு முன்பின் ஆதலால் இவை கி. பி. 9ம் நூற்ருண்டுக்குரியவை என்பதிலும் பொருத்தம் உண்டு. இந்நாடகங்களில் உதயணன் கதையை அடிப்படையாகக்கொண்டவை, பாரதக் கதையை அடிப்படையாகக் கொண்டவை, இராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டவை என மூன்று பகுதிகள் உண்டு. மூன்றும் ஒரே புலவனுல் இயற்றப்பட்டவைதானுஎன்பதும் இன்றும் கொள்கை வேற்றுமைக்குரிய செய்தியாகவே இருந்து வருகிறது. இவற்றுள் உதயணன் கதையை அடிப்படையாகக் கொண்ட வாசவதத்தை கனவு (ஸ்வப்னவாசவதாத்தம்) யௌகந்தராயணன் சூளுறவு (ப்ரதிஜ்ஞாயௌகந்தராயணம்) என்பவையே சிறந்தவையாகக் கொள்ளத்தக்கன.

பிறநாடகங்கள், வேணிசம்ஹாரம் பிரபோதசந்திரோதயம்

9-ம் நூற்ருண்டில் பட்டநாராயணன் என்பவரால் திரௌபதி குழல் முடித்தல் பற்றி வேணி சம்ஹாரமும், 10-ம் நூற்ருண்டில் இராஜசேகரனுல் கர்ப்பூர மஞ்சரி, வித்தசால பஞ்சிகை, பாலராமாயணம், பாலபாரதம் முதலியவையும்; தாமோதரமிச்ரன் எழுதிய மகா நாடகம் என வழங்கும் ஹனுமான் நாடகமும பிற்கால வைணவர்களால் சமயச் சார்பு காரணமாகப் பெருவழக்குப் பெற்ற நாடகங்கள் ஆகும். 11ம் நூற்ருண்டில் கிருஷ்ணமிச்ரரால் இயற்றப்பட்ட 'பிரபோத சந்திரோதயம்' ஆங்கில மொழியிலுள்ள இரக்ஷணிய யாத்ரிகம் (Pilgrim's Progress)போல் பண்புகளை உருவகப்படுத்திக் கதையாக்கிய வேதாந்தத் தொடர் உருவக் கதை நாடகம். வடமொழியில் இப் புதுத்துறை புகுந்த நாடகம இதுவே.

உலகப் புனைகதை இலக்கியமும் இந்தியாவும்

பஞ்ச தந்திரம்

உலக இலக்கியத்தில் வரலாற்று முறையில் இந்தியாவுக்குத் தனிச் சிறப்புத்தரும் துறை புனைகதை இலக்கியம் ஆகும். இத்துறையில் இன்று நமக்கு கிட்டியுள்ளவை வடமொழி நூல்கள். அவையும் பெரும்பாலும் கதம்ப இலக்கியம் போலப் பலபடி திரிபுற்று வந்த பிற்கால நூல்களே. ஆயினும் இவற்றின்மூல நூல்கள் வடமொழி காலத்துக்கு முற்பட்ட புத்த காலத்தவை என்றும், பாணி, அர்த்தமாகதி, பைசாச மொழி ஆகிய பண்டைத்தாய் மொழி இலக்கியங்களாக அவை இயங்கின என்றும் அறிகின்ருேம். அவற்றுள் புத்தரின் சாதகக் கதைகள் விலங்கு, பறவைகள் ஆகியவற்றுக்கு மனிதப் பண்பும பேச்சும் செயலும் தந்துள்

ளன. இவற்றிலிருந்து 'பஞ்ச தந்திரக் கதைகள்' உருவாயின. இன்று வடமொழியி லுள்ள உரையும் செய்யுள்களும் கலந்த பஞ்ச தந்திரம் கி. பி. 6-ம் நூற்றாண்டில்தான் இன்றைய உருவடைந்ததாயினும்; கி. பி. 2-ம் நூற்றாண்டிலேயே ஏதோ உருவில் வழங்கியிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. ஏனெனில் இதுவே கி. பி. 6-ம் நூற்றாண்டில் பாரசிகத்தில் மொழி பெயர்க்கப்பட்டுப் பாரசிகத்திலிருந்து அரபு, சிரியக், கிரேக்கம், இலத்தீனம் இவற்றிலும் தற்கால மேனாட்டு மொழிகளிலும் பரந்தது. பிற்காலத்தில் இது நீதி உரைகளுடனும் வேறு சில கதைகளுடனும் கலக்கப்பட்டு 'ஹிதோபதேசம்' என்ற நூல் இயற்றப்பட்டது.

பிருகத்கதா


கதாசரித் சாகரம்

வடமொழிக்கு முற்பட்ட காலத்துக் குரிய மற்றொரு கதைத் தொகுதி குணாட்யன் என்ற புலவனால் பிசாக மொழியில் கி. பி. 2-ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட 'பிருகத்கதா' ஆகும். இதன் சுருக்கமாக வடமொழியில் 11-ம் நூற்றாண்டில் புத்தமித்தரர், க்ஷேமேந்திரர் என்ற புலவர்கள் நூல்கள் எழுதினர். தவிர சோமதேவர் எனபவர் இதன் கதைகளை வகுத்துக் கூட்டிக் குறைத்துக் 'கதையோடைக் கடல்' (கதா சரித் சாகரம்) என்றவொரு நூலை இயற்றினர். தமிழில் குணாட்டியர் நூலின் மொழி பெயர்ப்பான பெருங்கதையின் பகுதிகள் கிடைத்துள்ளன. சங்ககாலத்திற்கும் முற்பட்ட இடைச்சங்கப் பண்பாடு நிறைந்த இத் தமிழ் நூலின் காலம் தெளியப்படவில்லை.

பாணன்: 'காதம்பரி'

ஹர்ஷன் அவைப் புலவனான பாணன் ஹர்ஷசரிதம் என்ற செய்யுள் காவியத்தையும காதம்பரி என்ற உரை நடைப் புனை கதைக் காவியத்தையும் இயற்றிப்புகழ் அடைந்தான். காளிதாசன் கால இயற்கை நடையாகிய விதர்ப்ப நெறிக்கு மாறான செயற்கை நடையாகிய கௌட நெறியில் முதல் முதல் எழுதிய புலவன் இவனே எனலாம். நைஷத சரிதம் வரலாறு தழுவிய காவியமாயினும் அதில் வரலாற்றுச் செய்திகளை மறைத்துப் புனைந்துரையும் விரிவுரையும் சொல்லடுக்குகளுமே மிகுந்துள்ளன. கதைத் தொடர்பும் கட்டுக்கோப்பும் மிகமிகக்குறைவு. இக் குறைபாடுகள் அனைத்தும் காதம்பரியிலும் உண்டாயினும் வடமொழியில் இதுவே இவ்விலக்கிய முறையில் முன் மாதிரியாய்க் கருதப்பட்டதால் பெருமையுற்றது. நீண்ட தொடர் மொழிகள் (ஸமாசங்கள்) வளைந்து வளைந்து செல்லும் வர்ணனைகள், சித்திர விசித்திரமான அணிகள் ஆகியவற்றின் விருந்து இந்நூல். காதம்பரிச்சுவை யறிந்தாருக்கு உணவுச்சுவை வேண்டாம் என்ற வடமொழிப்பழமொழி இதன் கவிப்பகழுக்குச்சான்று. இவன் எழுதியதாக 'அவந்தி சுந்தரிகதா' என்ற மற்றொரு உரைநடை நூலும் அண்மையில் வெளிவந்துள்ளது. பாரவி, தண்டி ஆகியோர்கள் வாழ்க்கை பற்றிய குறிப்புக்கள் இதில் காணப்படுகின்றன.

காதற் பரிசு!



-இளமைப்பித்தன்-

மோகனூர் முத்துச்சாமியைக் கைதுசெய்யும்படி சர்க்கார் அரஸ்ட் வாரண்ட் உத்தரவைப் பிறப்பித்திருந்தார்கள்.

போலீஸ் பார்வைக்கு இலக்காகாமல் தலைமறைவாகத் திரிந்து கொண்டிருந்தான் முத்துச்சாமி. அவன் பெரிய பொதுவுடமை வாதி; அதாவது கம்யூனிஸ்ட்.

அமராவதி ஆற்றுப் பாலத்தை வெடிவைத்து உடைத்த வழக்கில் அவனைச் சேர்ந்த மற்ற எல்லோரும் அகப்பட்டுக் கொண்டார்கள். ஆனால் முத்துச்சாமி மட்டும் எப்படியோ தப்பித்துக் கொண்டு 'அஞ்ஞாத வாசம்' புரிந்தான்.

போலீசாரின் விளம்பரப்படி அவனுக்கு வயது இருபத்தைந்து. மாநிறம். ஒல்லியான தேகம். 'கிராப்' செய்யப்பட்ட தலை. நெற்றியின் இடதுபக்கத்தில் சிறு தழும்பு ஒன்றும் உண்டாம். இவனைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஆயிரம் ரூபாய்கள் பரிசு.

தப்பியோடிய ஆசாமி பழைய மாதிரியே இருப்பானா? உரு மாறி விட்டால் தானே கொஞ்சம் பயமில்லாமல் ஊர் சுற்றித் திரியமுடியும்! ஆகையால் முத்துச்சாமி கூடுவிட்டுக் கூடு பாய்ந்தான். அதாவது தலையை மொட்டை யடித்துக் கொண்டோ, காவியுடை அணிந்து கொண்டோ மாறி விட வில்லை. லேசாக தாடியைத் வளர்த்துக்கொண்டு நாசுக்காக மீசையை முறுக்கி வளைத்து விட்டுக் கொண்டான். இடுப்பிலே ஒரு 'லுங்கி' தலையிலே ஒரு 'குல்லாய்' அவ்வளவுதான். முத்துச்சாமி, 'முகம்மத்கான்' ஆகிவிட்டான்.

அந்த நிலையில் அவனுடைய பெற்றோர்களை அழைத்துக் கொண்டு வந்து 'இவன்தான் உங்கள் மகன்' என்று சொன்னால் அவர்கள் கூட நம்ப மறுத்து விடுவார்கள். அப்படி அமைந்திருந்தது அந்த வேஷம். அவனுக்கு மூன்று மாதங்களாக அவன் 'காடம்பாடி' என்ற ஊரில் 'முகாம்' போட்டிருந்தான். கடற்கரையை ஒட்டிய ஊர் அது. அங்கே தமிழர்களும், முகமதியர்களும் சரிக்குச் சரி பங்காக வசித்து வந்தனர்.

காடம்பாடி காசிலிங்கம் ஒரு பெரிய பணக்காரப்புள்ளி. முத்துச்சாமிக்கு நெருங்கிய உறவினர். அவரிடம் போய்ச்சரணாகதியடைந்தான் அவன், அவருக்கு ரங்கூன், சிங்கப்பூர் முதலிய அக்கரைச் சீமைகளில் 'லேவாதேவி' வியாபாரம் உண்டாதலால் முத்துச்சாமியாகிய 'முகம்மத்கானை'ப் பற்றி விசாரித்தவர்களுக்கு அவர் 'நம்ம கடையைச் சேர்ந்த பையன். கணக்கு சம்பந்தமாக வந்திருக்கிறான்' என்று சொல்லித் தட்டிக் கழித்து விடுவார்; 'கம்யூனிஸ்ட்டுகளுக்கு உதவி செய்தவர்களும் தண்டிக்கப்படுவார்

கள், என்ற சட்டம் அவருக்கும் தெரியும்.

அதற்காக என்ன செய்வது? பையன் சொந்தக்காரனுயிற்றே 'ஏதோ பார்ப்போம்' என்ற தன்னம்பிக்கையிலேயே நாட்களைத் தள்ளிக்கொண்டு வந்தார் காசிலிங்கம். தன்னம்பிக்கையில்லாவிட்டால் மனிதன் உயிர்வாழ முடியாது என்ற கட்சியைச் சேர்ந்தவர் அவர்.

முத்துச்சாமி—அவன் வேணுமென்றுல் முகம்மதுகானுக இருக்கட்டும். நம் கதைக்கு அவன் பழைய முத்துச்சாமி தான்—வேளா வேளைக்குச் சாப்பிடுவதும் ஒழிந்த நேரங்களில் கணக்கப் பிள்ளையாக 'ஆக்டிங்' வேலைபார்ப்பதும் பொழுது போக்குக்காக கையெழுத்து மறையும் நேரத்தில் கடற்கரைக்குப் போய் உப்பங் காற்று வாங்குவதுமாக இருந்து வந்தான்.

வழக்கப்படி ஒருநாள் அவன் கடற்கரையிலிருந்து திரும்பி வந்து வீட்டிற்குள் நுழையும் போது திண்ணையில் ஒரு போலீஸ்காரன் உட்கார்ந்திருந்தான். முத்துச்சாமிக்கு அவனைப்பார்த்ததும் 'திக்' கென்றது. பயந்தவனுகக் காட்டிக் கொள்ளாமல் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு. "நீங்கள் எதற்காக வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டான்

"காசிலிங்கம் பிள்ளையைப் பார்க்கிறதற்காக" என்றுன் போலீஸ்காரன்.

"என்ன காரணம்?"

போலீஸ்காரன பதில் சொல்லுவதற்குள் முத்துச்சாமியின் மனத்தில் ஆயிர மாயிரம் கனவுகள் விதம் விதமாகத் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. கடைசியாகப் போலீஸ்காரன் சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து முத்துச்சாமியிடம் நீட்டி 'இதை அவரிடம் கொடுத்து விடுங்கள்' என்று சொன்னுன். அதைப் பிரித்துப்படித்த முத்துச்சாமியை அவன் தடுத்து நிறுத்தி "நீங்கள் யார்?" என்று கேட்டான் அவன்.

"நான் அவருடைய ரங்கூன் கடைக் கணக்கப்பிள்ளை, என் பெயர் முகம்மதுகான்"

கொஞ்ச நேரம் அவனைக் கூர்ந்து பார்த்தான் வந்தவன். அதையறிந்த முத்துச்சாமி 'சடக்' கென்று உள்ளே வேகமாக நுழையும் போது காசிலிங்கம் வெளியே வந்தார்.

வாசலில் இருந்த நிலைமையைக் கண்டு அவரும் முதலில் திகைத்துப் போய்விட்டார். முத்துச்சாமி சிரித்துக் கொண்டே கடிதத்தை அவரிடம் கொடுத்தான்.

"என்ன கடிதம்?"

"யாரோ, சப் இன்ஸ்பெக்டர் சதாசிவம் என்பவருடைய பெண்ணுக்கு 'ஆஸ்த்துமா' வாம் உப்பங்காற்று வாங்கினுல் நல்லதென்று டாக்டர் சொல்லியிருக்கிருராம். இரண்டு மாதத்திற்கு நம்முடைய கடற்கரைப் பங்களாவைக் கொடுத்து உதவும்படிக் கேட்டு இருக்கிருர்" என்று காசிலிங்கத்திடம் சொன்னுன் முத்துச்சாமி.

"அவர் எப்போது வந்தார்?"

போலீஸ்காரனைப் பார்த்துக் கேட்டார் காசிலிங்கம்

"அவர் வரலீங்க. எங்கோ இன்ஸ்பெக்டர் 'காம்ப்' செய்திருந்தபோது இந்தக்கடிதத்தை நேராக அவரிடம் கொடுத்து உங்களிடம் கொடுத்து விடும்படிச் சொன்னுங்களாம்" என்ருன் போலீஸ்காரன். அந்தப் பதிலைக் கேட்ட பிறகுதான் அவருக்குக் கொஞ்சம் நிம்மதி பிறந்தது.

சப் இன்ஸ்பெக்டர் சதாசிவம் காசிலிங்கத்துக்கு மிகவும் வேண்டியவர்; சரவணபுரியில் தற்சமயம் வேலைபார்த்துக் கொண்டிருக்கிருர்.

"சரி" பங்களாவில் வந்து தங்குவதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்துவைக்கிறேன் என்று உங்கள் இன்ஸ்பெக்டரிடம் சொல்லிவிடு" என்று சொன்ஞர் காசிலிங்கம். போலீஸ்காரன்போய்விட்டான்.

அவன் போனதும் காசிலிங்கம் கொஞ்சம் யோசனையிலாழ்ந்தார்.

"என்ன யோசிக்கிறீர்கள்?" என்றுகேட்டான் முத்துச்சாமி.

"உம்... போயும் போயும் நெருப்பு நம்மிடமே நெருங்கி வருகிறதே" என்றுதான் யோசிக்கிறேன்.

அவருடைய பதிலைக் கேட்டு முத்துச்சாமி சிரித்தான். "கவலைப்படவேண்டாம்; நெருப்பு நம்மை ஒன்றும் செய்துவிட முடியாது. அப்படியே தீப்பிடித்துக்கொண்டாலும் தப்பித்துக்கொள்ள, கடல் இருக்கிறது."

முத்துச்சாமியின் பதில் விசித்திரமாக இருந்தது அவருக்கு.

●

காசிலிங்கம் பிள்ளைக்குச் சொந்தமான கடற்கரை பங்களாவில், சப்இன்ஸ்பெக்டர் சதாசிவத்தின் குடும்பம் வந்து தங்கி மூன்று நாட்களாகின்றன.

அவருடைய இரண்டு பெண்கள், மருமகன், வேலைக்காரன் ஆக நான்கு பேர்கள்தான் அங்கே வந்திருந்தார்கள், முத்துச்சாமிதான் அவர்களுக்கு வேணுமென்ற உதவி ஒத்தாசைகள் செய்வதில் கண்ணும் கருத்துமாயிருந்தான்.



மாலைவேளைகளில் கடற்கரைக்குப் போய்க்காற்று வாங்க அவாகள் புறப்படும் பொழுது கூடவே முத்துச்சாமியும் போய்விடுவான். என்னவோ முகம் மத்காஞன முத்துச்சாமியின் பேரில் அவர் களெல்

லோருக்குமே ஒருவித அலாதியான அன்பு விழுந்து விட்டது.

அதிலும் அந்தச் சின்னப் பெண்—மோகனா-இருக்கிருளே அவள் படுசுட்டி. வெட வெடவென்று ஒடிந்து விழும் உடலை அழகாக வளைத்துக் குலுக்கிக் கொண்டு பேசுவதன் அழகில் ஈடுபட்ட முத்துச்சாமியின் மனத்தைக் கட்டுப்படுத்த அவனால்கூட முடியவில்லை. இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், அங்கே வந்திருந்த வேலைக்காரனின் பெயரும் முத்துச்சாமி தான்!

அவனை அடிக்கொருதரம் மோகனா, பெயரைச் சொல்லிக் கூப்பிடும் போது நமது முத்துச்சாமிக்கு அளவுகடந்த ஆனந்தம் ஏற்படும். அடுத்த கணம் 'நாமும் சதாசிவத்தின் மருமகனாக மாறினால் என்ன?' என்று நினைப்பான.

"என்ன, பர்வா? சும்மா உட்கார்ந்திருக்கிறீர்கள்? ஏதாவது ரங்கூன் கதை சொல்லுங்களேன்" என்று அவள் மினுக்கிக் கொண்டு கேட்கும் போது அவனுடைய கனவுகள் சடசட வென்று இடிந்து விழுந்து விடும். 'நாம் அஞ்ஞாதவாசம் செய்து கொண்டிருக்கிறோம்' எனற நினைவுக்கு வருவான்' அவன். அவர்களுக்கு முத்துச்சாமியின் கதைகள் ருசிகரமாக இருந்தன. 'ரங்கூன் கதைகள்' என்று பெயரை வைத்துக் கொண்டு அள்ளிவிடும் கதைகளெல்லாம் நிசமாக நடந்தவை அல்ல. எல்லாம் கைச்சரக்குத் தான். நாசுக்கும் நயமும, கலந்த 'பாணி'யிலே தன்கதைகளைச் சிரிப்புடன் குழைத்துத் தருவான். காசிலிங்கம், முத்துச்சாமியின் மேல் 'ஒரு கண்' வைத்துக் கொண்டு தான் இருந்தார். அடிக்கடி புத்திமதிகளைச் சொல்லி அவனை எச்சரிப்பார்.

முத்துச்சாமி நெஞ்சழுத்தக் காரன் என்பதில் துளிக்கூடச் சந்தேக மில்லை. என்றாலும் ஏதாவது எதிர்பாராத சம்பவங்கள் நேர்ந்து விட்டால் அதற்கு யாரென்ன செய்யமுடியும்?

வழக்கம் போல எல்லோரும் கடற்கரைக்கு உலாவப் போனார்கள் ஒருநாள். கொஞ்ச தூரம் போனதும் இனிமேல் என்னால் நடக்க முடியாதென்று சொல்லி உட்கார்ந்து விட்டாள் மோகனாவின் அக்காள். அவளுடைய கணவனும் அங்கேயே தங்கிவிட்டான்

மோகனா மாத்திரம், பாவா முகமத்கானுடன் கொஞ்ச தூரம போய்த்திரும்பிவருவதாகச் சொல்லிவிட்டு நடந்தாள்.

அலையடிக்கும் ஈர மணலின் மேல் இருவரும் வெகுதூரம் போனார்கள்.

'கலியாணமாகாத பெண் முன்பின் தெரியாதவனுடன் போகலாமா?' என்றுதானே கேட்கிறீர்கள்! சும்மாகேளுங்கள். அதனால் கதை ஒன்றும் நடுவில் நின்றுவிடாது.

அன்று மோகனாவின் அலங்காரமும் அழகும் இவ்வளவு நாட்களைவிட முத்துச்சாமியின் கண்களுக்கு ஏதோ புதுமாதிரி கத்தான் தென்பட்டது.

அவளிடம் உண்மையைச் சொல்லித் தன்னையே கல்யாணம் செய்து கொள்ளமுடியுமா என்று கேட்டு விட்டால் என்ன?

ஒரு கணம் முத்துச்சாமி யோசித்தான். கைவிரல்கள் தாடியை நெருடிக் கொண்டே இருந்தன. கண்கள் அலை எறிந்து விளையாடும் நீலக்கடலையும், அதிலிருந்து வெளியேறி தன்எதிரில் நிற்கும் 'கடல் மோகினி' யான மோகனாவையும் துழாவிக்கொண்டே இருந்தன. அதற்குள் ஒரு பெரிய அலை மோகனாவை நனைத்து விடவே அவள் கையைப் பிடித்து இழுத்தான் முத்துச்சாமி.

'காதல்' காதலெ'ன்று சொல்லுகிறோமே, அந்தக்காதல் அப்போதுதான் அவர்களிடையே மெள்ளப் புகுந்தது. கையை இழுத்துக் கொண்டு "என்ன பாவா?" என்றாள் மோகனா.

"அலையின் வேகம்" என்றான் முத்துச்சாமி.

"எங்கே?"

"இங்கேதான்" என்று தன் நெஞ்சைத் தொட்டுக்காட்டினான் அவன்.

"ஐயோ! பாவா! உங்கள் முகத்தில் மீசையும் தாடியும் பார்க்கிறதுக்கு நல்லாவே இல்லை. இதை முதலில் எடுத்துக் கொண்டு விடுங்கள். பிறகுதான்......"

'களுக்' கென்று மோகனா சிரித்ததைக் கூட அவன்

காதில்வாங்கிக்கொள்ளவில்லை. வந்த கோபத்தில் தாடி மீசையை ஒரு கை பார்த்து விடுவோமா என்று கூடத் தோன்றியது. அவனுடைய காதலுக்கு இடையூறாக இருக்கும் அவைகளைவிட்டு வைப்பானா அவன்?

மறுநாளே அவைகளை அப்புறப்படுத்துவதற்கு வீட்டைவிட்டுப் புறப்பட்டான். தன்னை அபாயத்திலிருந்து இத்தனை நாட்களாகக் காப்பாற்றி வந்த மீசைக்கும் தாடிக்கும் கொஞ்சமாவது நன்றி விசுவாசம் தெரிவித்தானா?

நேராகச் 'சலூனு'க்குள் நுழைந்தான். தாடி, மீசைகளை மழுங்க க்ஷவரம் செய்து கொண்டு 'மைனர்' மாதிரி வெளியே புறப்பட்டான்.

திடீரென்று பின்னாலிருந்து இரண்டு பேர்கள் அவனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விட்டார்கள். முத்துச்சாமிக்கு மூளை கலங்கிப் போய்விடும்போல இருந்தது.

"என்ன மோகனூர் முத்துச் சாமி சௌக்கியமா?" என்று சிரித்துக்கொண்டே கேட்டார் ஒரு பருத்த மனிதர்.

அவனைப் பிடித்தவர்கள் போலீஸ்காரர்கள். சிரித்தவர் சப்-இன்ஸ்பெக்டர் சதாசிவம். பிறகென்ன?...... முத்துச்சாமியைச் சிறையிலடைத்தார்கள்.

விசாரணை முடிந்தபிறகு அவனுக்கு மூன்று வருட தண்டனை கிடைத்தது. சப் இன்ஸ்பெக்டர் சதாசிவமும் காசிலிங்கமும் பேசிக் கொண்டிருக்கும் பொழுது காசிலிங்கம் கண்கலங்கினர். அதைக்கண்ட சதாசிவம் "இந்தாருங்கள், முத்துச்சாமியைப் பிடித்துக் கொடுத்ததற்குப் பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாய்கள்" என்று ஒருபையை எதிரே வைத்தார். அதைக் கண்ட காசிலிங்கம் திடுக்கிட்டுப் பையைப் பார்த்தார். சதாசிவம் பின்வருமாறு சொன்னார்.

"முத்துச்சாமி உருமாறி உங்களிடம் வந்து சேர்ந்திருப்பதாகத் தகவல் வந்தது: உடனே என் பெண்ணுக்கு உடல்நலமில்லையென்றுபொய்சொல்லி, சின்னவளான மோகனாவையும் அனுப்பிவைத்தேன். முத்துச்சாமி தன்னிடம் காதல்கொண்டிருப்பதாக எனக்குப் பதில் எழுதினாள் மோகனா. உடனே சமயத்தை நழுவவிடாமல் வந்துசேர்ந்தேன். நீங்கள் அவனை ஆதரித்தீர்களென்று சொன்னால் குற்றம் உங்கள் மீதும்விழும். எனவே நீங்களே பிடித்துக் கொடுத்ததாக வழக்கை மாற்றிவிட்டேன். பரிசுத் தொகையையும் உங்களுக்குக் கையுடன் வாங்கிக் கொண்டுவந்துவிட்டேன். ஏன் தயங்குகிறீர்கள? எடுத்துக் கொள்ளுங்கள்".

காசிலிங்கம், பையை அவிழ்த்துப்பார்த்தார். ஆயிரம் ரூபாய்கள் புத்தம்புதுநோட்டுகளாக மாறி மின்னிக்கொண்டிருந்தன. "இது மோகனாவின் பணம்; என்னுடையதல்ல" என்று சொல்லிப் பெருமூச்சுவிட்டார் அவர்.



15. அரசன் யார்? கள்வன் யார்?

ஆயர்பாடியிலே மாதரி கண்ணாற் கண்ட தீயநிகழ்ச்சிகளை ஒப்ப, அரசமாதேவி கனவிலே தீயன நிகழக் காணுகிறாள். செங்கோல் வளைவதை, வெண்குடை நிலம் நோக்கி விழுவதை, நீதிமணி அநீதி கண்டு நடுங்குவதை, கதிரவனை இருள்சூழ்ந்து கவருவதைக் கண்டாள். கண்விழித்தாள். அச்சத்தால் உடல் நடுங்கி உளம் பதறினாள். கண்ட கனவைக் கணவனிடம் சொல்லலாம் என எண்ணி வருகிறாள். வழிஎலாம் நின்ற பணிமகளிர் வணங்கி வாழ்த்தினர். நறுமலர் தூவினர். பெரும் புகழ் பாடினர். அரியணையில் அமர்ந்த அரசனுக்கு அருகமர்ந்தாள் அரசி. கனவிலே கண்ட தீயகனவால் 'வருவதோர் துயர் உண்டு' என்று சொல்லி வாய்மூடு முன்னே அத்துன்பமும் வடிவுதாங்கி வந்துவிட்டது.

வாயிலோயே வாயிலோயே
அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே

'அநீதி செலுத்தும் ஒருவன் அரசனா? அவனுக்கு ஒரு அரண்மனையா? அதற்கும் ஒரு காவலாளியா? எல்லாம் நகைக்கத் தக்கனவாய் இருக்கிறதே' என்று நினைக்கிறாள் வந்த கண்ணகி.

அரசனிடமிருந்த அறிவு குடிபோய் விட்டதாம். நீதியிருந்த உள்ளத்திலே அது நிலை பெயர்ந்து விட்டதாம். இரண்டையும் இழந்து விட்டு வறியனாய் அரசன் அரியணையில் அமர்ந்துளான் என்கிறாள் கண்ணகி.

இணையரிச் சிலம்பொன்(று)
ஏந்திய கையள்

கணவனை இழந்தாள்
கடையகத்தாள் என்(று)
அறிவிப் பாயே! அறிவிப்பாயே!

"கையிலே ஒரு சிலம்பை ஏந்தியவள்; கணவனை இழந்தவள். இழந்த நிலையில் கடைவாயிலின் கண்ணே நிற்பவள் என்று சொல். நிற்காதே ஓடு ஓடு" என்று வாயில் காப்பாளனைத் துரத்துகிறாள் கண்ணகி. இனி அவள் யார்பொருட்டும் அஞ்சவேண்டியவளில்லை யல்லவா!

வாயில் காப்போன் கண்ணகியைக் காணவே அஞ்சுகிறான். விழித்த கண்ணையும் மூடிக் கொள்ளுகிறான். அவள் சொல்லுக்குச் சொல் நடு நடுங்கினான். துடி துடித்து ஓடோடி வருகிறான். வந்து அரசன் முன்னே நின்று.

வாழிஎம் கொற்கை
வேந்தே வாழி
தென்னம் பொருப்பின்
தலைவ வாழி
செழிய வாழி
தென்னவ வாழி
பழியொடு படராப்
பஞ்சவ வாழி

என என்றுமில்லாத அளவுக்கு வாயில் காப்போன் இன்று மிகுதியாகவே வாழி பாடுகிறான். கொற்கை வேந்துக்கு முன்னும் பின்னும் 'வாழி' வைத்து வாழ்த்துகிறான். பழி வழியில் செல்லாத பாண்டியனை வாழ்க என்று வணங்குகின்ற முறை எல்லாம் வாழ்த்தெடுக்கிறான். இனி வந்து நிற்கும் துன்பத்தின் வடிவத்தைச் சொல்லுகிறான்.

அடர்த்தெழு குருதி
அடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம்
ஏறிய மடக்கொடி
வெற்றிவேல் தடக்கைக்
கொற்றவை அல்லள்

"இரத்தம் ஒழுகும் தலையைக் கையிலே ஏந்திய காளிபோல் காணப்படுகிறாள். ஆனால் கையிலே சிலம்பேந்தி வந்துளாள், அதனால் காளியுமல்ல"

அறுவர்க் கிளைய
நங்கை இறைவனை
ஆடல் கண்டருளிய
அணங்கு சூருடைக்
கானகம் உகந்த காளி
தாருகன்
பேருரங் கிழித்த
பெண்ணும் அல்லள்

"தலைவிரி கோலமாய் நிற்பதைக் கண்டால் பிடாரியோ என்று தோன்றுகிறது. ஆனால் பிடாரியுமல்ல. பத்திர காளி என்று சொல்லலாமென்றாலோ அப்படியும் சொல்லிவிட முடியவில்லை. அஞ்சத்தக்க அவள் நிலையைப் பார்த்தால் காட்டிலே நடமாடும் காளியோ என்று சொல்லவும் இயலவில்லை. சீறி வருகின்ற சினத்தைப்பார்த்தால் துர்க்கையோ என்றால் அப்படியுமில்லை. ஆனால் அவள் தோற்றமோ பயங்கரமாக இருக்கிறது. யார் மீதோ கறுவு கொண்டு வந்திருப்பவள் போலத் தெரிகிறது. கடுங் கோபங் கொண்டு வந்திருக்கிறாள். கையிலே வேலைப்பாடு மிகுந்த ஒரு பொற்சிலம்பை ஏந்தி வந்திருக்கிறாள். கணவனை இழந்த இத்தகையவள் கடைவாயிலின் கண்ணே நிற்பதாய்" கூறினான்.

செற்றனள் போலும்
செயிர்த்தனள் போலும்
பொற்றொழில் சிலம்பொன்று
ஏந்திய கையள்
கணவனை இழந்தாள்
கடையகத் தாளே

என்று கூறும் வாயில்காப்போன் கண்ட காட்சியை,

கொண்ட பரபரப்பை, நடுங்கிய நடுக்கத்தை ஆசிரியர் நன்கு புலப்படுத்துகிருர். அரசமா தேவி கண்ட கனவிற்கும் வாயில்காப்போன் வந்து கூறிய சொற்களுக்கும் தொடர்பை அரசன் அறிந்து கொள்ளு கிருன்.'அத்தகையவள் இங்கே வருக. அவளை நீ அழைத்து வருவாயாக' என்று கூறு கிருன் அரசன். ஆணைபெற்ற வாயில்காப்போன் ஒடுங்கி நடுங்கி அரசவைக்கு வழி காட்டக் கண்ணகி வந்து நிற் கிருள்.

நீர்வார் கண்ணை
என்முன் வந்தோய்
யாரையோ மடக்கொடி
யோயே

"நீர் ஓடிவரும் கண்ணேடு எம் முன்வந்த இளங்கொடி போல் வாய் நீ யார்?" என்று கேட்கி ருன் அரசன். கேள்விக்கு விடை எப்படி இருக்கவேண் டும் என்பதற்கொரு எடுத்துச் காட்டாய் இனிக் கண்ணகி பேசுகிருள்.

"தேராமன்ன செப்புவது உடையேன்" என்கிருள். அரசே என்று அழைக்கத் தொடங்கும் நிலையிலேயே 'தேரா' என்ருெரு அடை மொழி கொடுக்கிருள். அதனுல் அரசனுதற்கு அருகதை அற் றவன் என்பது அவள் கூறும முதற் குற்றம்.

பாண்டியர் மரபுதோன்றி செங்கோல் புரிந்த இதுநாள் வரையிலும் அரச சபையிலே அரசனை நோக்கி, ஒரு இளம் பெண் சொல்லத் துணியாத ஒன்றைத் 'தேராமன்ன'என்று கூறுவதன் மூலம் கண்ணகி, 'அஞ்சுவது மில்லை, அஞ்ச வரு வது மில்லை' என்ற துணிவிலே பேசி இருக்கிருள். யார் என்ற விஞவுக்கு நாடு, நகர், கணவன் பெயர், தன்பெயர் கூறுவதன் மூலம் விடையளிக்கப் படவேண்டும். அடைக்கல மாகத் தன்னை வந்து அடைந்த புருவின் உயிரைககாத்த சிபி யும், கன்றை இழந்து கண்ணீர் விட்ட பசுவின பொருட்டு நீதி வழங்கத் தன்னரிய ஒரேமகனை இழக்கத் துணிந்த வேந்தனும் பிறந்த சோழர் குடியிலே வந்த கரிகால் வளவன் ஆளும் சோழநாட்டுப் புகார்நகரே என் னுடைய ஊராகும் என்கிருள்.

எள்ளறு சிறப்பின்
இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண்
தீர்த்தோன் அன்றியும்
வாயிற் கடைமணி
நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர்
நெஞ்சு சுடத்தான் தன்
அரும்பெறற் புதல்வனை
ஆழியின் மடித்தோன்
பெரும் பெயர்ப்
புகாரெம் பதியே

எனவரும் பகுதியிலே தன் ஞட்டின் ஒப்புயர்வற்ற நீதியின் நேர்மையை எடுத்துக் கூறு கிருள்.

பறவையின் பொருட்டும், விலங்கின் பொருட்டும் காட்டிய நீதியைக்கூறுமுகமாக மக்கள் பொருட்டு மன்னன் வழங்கத் தக்க நீதி எத்தகையதாக இருக்கவேண்டும் என்பதை எண்ணவைத்து விடுகிருள் கண்ணகி.

அடைக்கலமாக வந்த புரு வின் உயிரைக் காத்து நீதி செலுத்திய மன்னனைக் கூறு முகமாக அடைக்கலமாய் வந் தடைந்த தன் கணவனது உயிரைக் காக்கத்தவறிய அநீ தியைக் கொடுமையை உணர வைக்கிருள். பசுவின் கன்றை

அறியாது கொன்றனரே மகனை இழந்து நீதிவழங்கிய மன்னனை ஒப்பத் தவறுசெய்த பாண்டியன் தன் உயிரை இழந்து நீதி வழங்கத் தவறியதை நினைக்க வைக்கிறாள்.

இனித் தன்னைக் கூறிக்கொள்ள வேண்டும. தன் பெயரைக் கூறிக்கொளவது எளிது. கணவன் பெயரையோ மாமன் பெயரையோ கூறுவது தமிழ்நாட்டு மகளிரிடத்தே மரபிழந்ததாகி விட்டது. கண்ணகிக்குக் கணவன் பெயரோடு மட்டுமல்லாது மாமன் பெயரையும் கூறவேண்டியதாகி விட்டது. கண்ணகியை அரசன் அறிந்து கொள்ள வேண்டுமானால் அவள் மாமன் பெயரைக் கூறியாகவேண்டும். முன்பே மாதரியிடம் கவுந்தியடிகள் கண்ணகியை அடைக்கலமாகத்தரும் சமயத்தில் இவள் கணவனது தந்தையின் பெயரைக் கூறினால் இந்நகரத்தார் பெருமை அறிந்து ஏற்பர் என்று கூறியிருக்கக் கண்டோம்.

அதை இங்கே நாம் நினைத்துக் கொள்ள வேண்டும். கணவனை இழந்த நிலையிலே கண்ணகி இழந்த மரபுக்கு உயிர் கொடுத்துப் பேசுகிறாள்.

ஏசாச் சிறப்பின்
இமையவர் விளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன்
மகனையாகி
வாழ்தல் வேண்டி
ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா
நின்னகர்ப் புகுந்திங்கு
என்காற் சிலம்பு
பகர்தல் வேண்டி நின்பால்
கொலைக் களப்பட்ட
கோவலன் மனைவி
கண்ணகி என்பதென் பெயரே

வாணிபம் செய்யவந்தவன் கள்வனாய்ப் பழிசுமத்தப் பட்டு கடைசியில் உன்னால் கொலையும் செய்யப்பட்டு விட்ட கோவலன் மனைவி என்று கூறுகிறாள்.

கள்வனைக் கோறல்
கடுங்கோலன்று
வெள்வேல் கொற்றங்காண்
என

"பெண்ணணங்கே கள்வனைக் கொல்வது கடுங்கோலல்லவே, அது அரசநீதியாயிற்றே" என்றான் பாண்டியன.

எனவே இந்த நேரம் வரையிலும் தான் நீதி புரிந்திருபபதாகவே பாண்டியன் கருதிப பேசுவதைக் கண்ணகி உணர்ந்தாள். தன கணவன் கள்வனல்லன் என்பதை நேருக்கு நேராக நிரூபிக்க வேண்டிய கடமை கண்ணகிக்கு நேர்ந்து விட்டது. பாண்டியனை நோக்கி' அறநெறியில் செல்லாத அரசே! என சிலம்பிற்குள் இருக்கும் பரல் மாணிக்கமே" என்றாள் கண்ணகி.

'இப்பெண் கூறியது செவ்விய மொழியாகும். எமமுடைய சிலம்பினது பரல் முத்துடையதே' என்று கூறி ஏவலாளர் மூலமாய் அச்சிலம்பைக் கொண்டு வரச் செய்து கண்ணகியின் முன்னே வைத்தான்.

தருகெனத் தந்து
தான்முன் வைப்பக்
கண்ணகி அணிமணிக்
காற்சிலம்பு உடைக்க
மன்னவன் வாய்முதல்
தெறித்தது மணியே

சினம் கொதித்துப் பொங்கும் கண்ணகி சிலம்பை வாங்கினாள். உடைத்தாள். என்ன ஆச்சரியம்! அதிலிருந்து தெறித்த மாணிக்கப் பரல் ஒன்று மன்னவன் முகத்திலே மோதிக் கீழேவிழுந்தது. விழுந்தது பாண்டியர் காத்த பழம் புகழ். தாழ்ந்தது வெண்குடை. தளர்ந்தது செங்கோல். 'யானோ அரசன்; யானே கள்வன்' என்று பாண்டியன் தன்னைத்தானே கேட்டுக்கொள்கிறான். அரசன் யார்? கள்வன் யார்? அரசனே கள்வன். கள்வனே அரசன். இருவரும் ஒருவரே என்பதைக் கண்ணகி கணமெதிரே காட்டிவிட்டாள்.

மன்பதை காக்கும்
தென்புலங் காவல்
என்முதல் பிழைத்தது
கெடுகஎன் ஆயுள்என
மன்னவன் மயங்கி
வீழ்ந் தனனே

அநீதி கண்டறியாத இவ்வரசர் மரபு வஞ்சகப் பொற்கொல்லன் வார்த்தையை நம்பிய என்னால் அழியநேர்ந்ததே என எண்ணினான். ஏங்கினான். மயங்கிக் கீழே விழுந்தான். அழியும் உயிரைவிட்டான். அழியாத புகழை நிலைநிறுத்தினான். மன்னர்கட்கெல்லாம் ஒரு மேல்வரிச் சட்டமாய் ஆகிவிட்டான். அவன் அருகமர்ந்த அரசமாதேவி,மன்னவன் நிலை கண்டாள். மனமுடைந்து போனாள். கணவனை இழந்த கண்ணகிக்குத் தான் சமாதானம் சொல்ல முடியாத நிலையை எண்ணினாள். 'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்லென இணையடி தொழுது வீழ்ந்தனள்' என்று நிகழ்ச்சிகள் முடிகின்றன.

பெற்றதாயை இழந்த ஒருவருக்குச் சிற்றன்னையைக் காட்டி துன்பத்தை ஆற்றுவிக்கலாம். அப்படியே தந்தை அண்ணன் முதலியவர்களை இழந்தவர்களுக்கு அடுத்துள்ள மற்றவர்களைக் காட்டி ஆறுதல் கூறலாம். கணவனை இழந்துவிட்ட மனைவிக்குயாரைக்காட்டி ஆறுதல் கூறுவது? அந்த இடத்தில் கணவனைத்தவிர வேறொருவரை வைத்துக் கூறமுடிவதில்லையல்லவா? அரசமாதேவியின் எண்ணத்திலே பிறந்து அவள் வாழ்வின் இறுதி வார்த்தையாய் வெளிவந்தன இவை. அரசன்உயிரைத்தேடிச் செல்பவள் போல அரசமாதேவியும்உயிர்விட்டாள்.

கண்ணகியும் அரண்மனையை விட்டு அகன்றாள். தெருவிலே வந்துகொண்டிருக்கிறாள்.

கண்ணகியின் நீல மலர் போலும் விழிகளிலே நீர் பொழிந்து வருகிறது. இரண்டிலே ஒன்றை இழந்து எஞ்சிய சிலம்பை ஏந்தியவளாய் உயிர் ஓடிப்போன உடலைச் சுமந்து, காடுபோல் விரிந்து உடல்முழுதும் சூழ்ந்த கருங்கூந்தலுடன் கண்ணகியைக் கண்ட அளவிலே 'பாண்டியன் உயிர் இழந்த உடலானான். இதை நாம் காண நேர்ந்ததே' என்று மதுரை மக்கள் மனங்கலங்கினர்.

'அநீதி செய்தவர்களை அறம் நின்று கொல்லும்' என்பதை இந்நிகழ்ச்சியால் இளங்கோ புலப்படுத்தக் காணுகிறோம்.



உலக அரங்கில்!

-டி.கே. சீனிவாசன்-

வெகுதூரத்தில் ஒலித்த அந்த முழக்கம் தெரு முழுவதுமே தெளிவாகக் கேட்டது. "முதலாளித்துவம் ஒழிக!" "தொழிலாளர் வாழ்க!" மெல்ல மெல்ல நெருங்கிவரும் ஒன்று சேர்ந்த பல குரலொலிகள் அஸ்ராவின் காதுகளில் விழுந்தன. மாடிவீடு மண் குடிசையாக மாறும் இடைவேளையில் எப்போதுமே ஒரு சோகம் நிறைந்த வரலாறு தொக்கிநிற்கும் என்பது அவளுக்கு ஏற்கனவே தெரிந்தது தான். ஆனால் மாடிவீட்டுக்கும் மண்குடிசைக்கும் இடையில் ஒரு பெரும் போராட்டமே நடக்கிறது என்பதை அப்போதுதான் தெரிந்துகொண்டாள். மெல்ல ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்தாள்.

"அஸ்ரா! இது என்ன கெட்ட பழக்கம்?" என்று அவள் கணவன் கமால் அதட்டியபோதுதான் அவளுக்குத் தன்னை மறந்து நடந்துகொண்டது தெரிய வந்தது.

சங்கு ஒலித்துமுடிந்த சில விநாடிகளுக்கு அதன் ஒலி நம் காதுகளில் தங்கியிருந்து ஒலிப்பதுபோல அந்தக் குரலொலிகள் அஸ்ராவின் காதுகளைவிட்டுப் பிரியாமல் சுற்றிக்கொண்டேயிருந்தன. அவள் மட்டும் ஒருஆணாகப் பிறந்திருந்தால்............! இஷ்டம்போல வெளியே போய்ச் சுற்றிவிட்டுச் சாப்பாட்டு வேளைக்கு வீட்டுக்கு வரலாம். உள்ளே நுழைந்தவுடன் தட்டில் சோறுங் கறியும் தன்னாலே வந்து முன்னாலே உட்காரும். ஆனால் அல்லாவின் கருணை அவளுக்குப் பெண்ணாகப் பிறக்கும் பாக்கியத்தைத்தான் அளித்திருந்தது! அவளைப் பெண்ணாகப் படைத்த கடவுள் ஏன் அந்தத் திரையையும் படைத்திருக்க வேண்டும்? அழுக்குப் படிந்த சாக்குத் திரைதான்! பிடித்திழுத்தால் அறுந்து துண்டு துண்டாகக் கிழிந்து கீழே விழுந்துவிடும். "உத்தரவன்னியில் உள்ளே பிரவேசிக்கக் கூடாது" என்ற அறிவிப்புகளைப் போல "உத்திரவன்னியில் வெளியே கால் எடுத்து வைக்கக்கூடாது" என்று அவளை எப்போதும் எச்சரித்துக் கொண்டிருந்தது, அது.

"அம்மா" என்ற குரல் வெளியிலிருந்து கேட்டது. வீதியில் பிச்சை கேட்க வரும் அந்த அந்தகன்தான் அவன். அவனுக்கு இல்லையென்றுசொல்லாமல் தினந் தினம் ஏதாவது கொடுக்கும் புண்ணியவதி அந்தத் தெருவிலேயே அஸ்ரா ஒருத்திதான். தட்டில் சோறுங் கறியும் எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள். வெளியே நிற்கும் அவனுருவம் அவளுக்கு நன்றாகத் தெரிந்தது. அவனுக்கும் விழிகளிருந்திருந்தால் திரைக்கப்பால் இருந்த அவள் உருவம் தெளி

வாகவே தெரிந்திருக்கும்! ஆனு லும் வெளியுலகத்துக்கும் அவ ளுக்கும் இடையே எழுப்பப் பட்ட அந்த அரணை நகர்த் தும் உரிமை அவளுக்குக் கிடையாது.

"பாபா! உங்கள் வீடு எங்கே யிருக்கிறது?"

"இங்கிருந்து நேரே ஒருமைல் நடந்தால் அங்கேயிருக்கிற தம்மா என் குடிசை"

"முஸ்லீம் பெண்கள் வீட்டை விட்டு வெளியே வரக்கூ டாதா?"

"வரலாம் அம்மா. யார்வரக் கூடாது என்று சொன்னது?"

"மற்ற ஆண்கள் முன்னால் நடமாடக்கூடாது என்று குரா னில் சொல்லியிருக்கிறதாமே!"

"இல்லையம்மா! குரானில் இச்சையைத் தூண்டிவிடும் அங்கங்களை மூடி மறைத்துக் கொள்ள வேண்டும் என்றுதா னிருக்கிறதே தவிரச் சிறைக் குள் அடைபட்டிருக்கவேண்டும் என்றில்லையம்மா!"

"பச்சைப் பசேலென்றவயல் களும், நீலநிற வானத்தைத் தடையேதுமில்லாமல் பார்க்க வெட்ட வெளியும் இங்கே சமீ பத்தில் எங்காவது இருக்கி றதா?"

அஸ்ரா இதைக் கேட்ட வுடன் அந்த அந்தகன் அவளை நிமிர்ந்து பார்த்தான். அவன் விழிகளில் ஒளிமட்டுமிருந்திருந் தால் அவைகளில் ஆச்சரியம் படமெடுத்தாடியிருக்கும்!

"இருக்கிறது, அம்மா. என் குடிசையைச் சுற்றிலும் அப் படித்தானம்மா"

மேலும் கேட்பாள் என்று எதிர்பார்த்த அவனுக்குத் தொடர்ந்த இரண்டு மூன்று நிமிஷ மௌனம் ஏமாற்றமளித் தது.

"என்னம்மா கவலை உனக்கு?" என்று பரிவோடு கேட்டான்.

"ஒன்றுமில்லை" என்ற பதி லோடு கலந்துவந்த பெருமூச்சு அவனுக்கு அவளிடத்தில் இரக்கத்தைத் தூண்டியது. அவளை எப்படியாவது மகிழ் விக்க வேண்டும் என்ற அள வுக்கு மீறிய அக்கரை தன் னுலே எழுந்தது.

"ஏதாவது ஒரு பாட்டுப் பாடுகிறேன்: கேட்கிறுயா அம்மா" என்று சொல்லி விட்டு அவன் அவளுடைய பதிலை எதிர்பார்க்காமல் பாடத் தொடங்கிவிட்டான்

"அகிலுந் தேக்கும்
அழியாக் குன்றம்
அமைவாய் முத்துக்
குவியும் கடல்கள்
முகிலும் செந்நெலும்
முழங்கு மஞ்சை
முல்லைக்காடு மணக்கும்
நாடு வாழ்க வாழ்கவே"

சலன மில்லாத குளத்தில் மிதந்து செல்லும் ஓடம் போல ஒவ்வொரு சொல்லும் ஆடி அசைந்து கொண்டு காற்றில் மிதந்து சென்றன. எழில் நிறைந்த இயற்கை அவள்முன் நின்று கூத்தாடிற்று. வானை யெட்டும் மரங்கள், ஒளி வீசும் முத்துக்கள்,சாய்ந்து வளைந்து, மாலைநேரத்து மஞ்சள் நிறக் கதிரவன் ஒளிபட்டு மின்னும் நெல்மணிகள், சிரித்து இதழ் விரித்து மணம் பரப்பும் முல்லை மலர்கள்! அவன்! விழிகளில் ஒளியற்ற வன்! இவள்! ஒளியிருந்தும் பார்க்கும் உரிமையற்றவள்! அவர்கள் இருவரும் பார்த்தறி

யாத ஓவியம், ஆனால் கேட்டு மகிழ்ச்சியடையுங் காவியம்!

அன்றிரவு அஸ்ராவுக்கு தூக்கமே வரவில்லை. தெருவில் ஆட்கள் நடமாட்டத்தின் அறிவிப்புகளாக இருந்த ஆணிகள் வைத்துப் பதித்த செருப்புகளின் ஓசைகளும் நின்று போயின. காலையில் நடந்த அந்த நிகழ்ச்சிகள் அவள் சிந்தையில் பதிந்திருந்தன. உடலைக் கீழே சாய்த்தவுடன் சுற்றப்பட்டிருந்த கயிற்றிலிருந்து உருவி விடப்பட்ட பம்பரத்தைப் போல அவள் உள்ளம் சுழலத் தொடங்கியது. அவளுடைய இளம்பருவத்து நினைவுகள்! பொழியுங் நிலவு, வழியுந் தேன், வாடாத ரோஜா, துடிக்காத—துவளாத உள்ளங்கள் இவை அத்தனையும் ஒன்று சேர்ந்தால் கூட அந்தப் பருவத்துக்கு இணையாகா! விழிகளைத் திறந்தவுடன் மறைந்து போகும் அழகான கனவைப் போன்ற அந்தப் பருவம் அவள் கண்முன் வந்து நின்றது. மெல்ல அதிலேயே எண்ணங்களை ஓடவிட்டாள்.

2

"சித்திரந் தீட்டுவதற்குத் திறமை மட்டும் போதாது. எப்படி எப்படி வர்ணங்களைச் சேர்த்துக் குழைக்க வேண்டும் என்பதும் தெரிந்திருக்க வேண்டும்."

இதைச் சொல்லிவிட்டு ஸலாம் தன் தங்கை அஸ்ராவைப் பெருமையோடு பார்த்தான். தன்னிடமிருந்து விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள ஒரு ஆள் அகப்பட்டிருக்கிறதே என்பதில் அவனுக்கு அளவற்ற மகிழ்ச்சி. அஸ்ராவுக்கு இதெல்லாம் புரியவில்லை. ஆனால் தன் அண்ணன் இந்தமாதிரி விஷயங்களைப் பற்றியெல்லாம் தன்னோடு பேசுவதென்னவோ மிகவும் பிடித்திருந்தது.

"ஒவ்வொன்றையுங் கூர்ந்து கவனிக்க வேண்டும். அப்படியே மனத்தில் பதியவைத்துக் கொள்ள வேண்டும்"

ஸலாம் மேலே பேசிக் கொண்டே போனான். அஸ்ரா அப்போதுதான் எழுதி முடிந்த ஒரு சித்திரத்தில் ஆழ்ந்து விட்டாள். எங்கோ வெகுதூரத்தில் அடிவானத்தில் பாதிமுகங் காட்டி அப்போதுதான் ஆழ்ந்த துயிலிலிருந்து விழித்தெழுந்த உலகத்தைப் பார்த்து மகிழும் பகலவன்—அவனுக்கு முன்னால் ஒளிக் கதிர்களால் வெண்மை மெருகு தீட்டப்பட்ட கருநீலம்படிந்த ஒருசிறு நீர்த்தேக்கம் — ஒரு துண்டு நிலப்பரப்பு—அதில் வளைந்து நெளிந்த ஓரிரு



தென்னை மரங்கள், தூய வெள் ளைத் திரையில் தூரிகையும் வர் ணங்களும் ஒன்றுபட்டெழுப் பிய மாயாஜாலம்! இதுமாதிரி சித்திரங்கள் பலவற்றை அஸ்ரா பார்த்திருக்கிருள். எல் லாம் கதிரவன் உதிக்கும் போதும் மறையும் போதும் காணப்படும் தோற்றங்களைச் சித்தரிப்பவைதான். ஒன்ரு வது அவன் உச்சியிலிருந்து காயும்போது எப்படியிருக்கும் என்பதைச் சித்தரிக்க வில்லை. இது என......?

"என் அண்ணு ஒரு படமா வது மத்தியானம் பனிரண்டு மணிக்குச் சூரியன் எப்படியிருக் கும் என்பதை எடுத்துக் காட்டவில்லை?"

ஆர்வத்தோடு அந்தக் கேள் வியைக் கேட்டுவிட்டுத் தன அண்ணன் முகத்தைக் கூர்ந்து கவனித்தாள் அஸ்ரா. ஸலா முக்கு இந்தக் கேள்வி என் னவோ புரியத்தான் செய்தது. ஆனல் பதில் சொல்வது என் பது மட்டும்......! இருந்தாலும் தன் அறியாமையை அவளிடங் காட்டிக்கொள்ள அவன் தயா ராக இல்லை.

"இதெல்லாம் உனக்குப் புரி யாது. போய் உன் வேலையைப் பார்"

என்று கடுமையாகவே சொல்லிவிட்டான். மலர்ந்த முகமும் மகிழ்ச்சியுமாக அவள் இருப்பதிலேயே கண்ணுங் கருத்துமாக இருக்கும் ஸலாம் அன்று அப்படி நடந்து கொண்டது அஸ்ராவுக்கு இரண்டு மூன்று நாட்கள் தொடர்ந்து வேதனை தந்து கொண்டே இருந்தது.

ஜனுப் ஹாஜீ அப்துல் குத் தூஸ் பாக்ஷா சாஹிபும் அவரு டைய மனைவியும தங்கள ஒரே மகனுன ஸலாமையும் ஒரே மக ளான அஸ்ராவையும் ஒரு வீடு, கொஞ்சம் நிலம். தேவையான பணம இவற்ருேடு தன்னந் தனியே விட்டு விட்டு அல்லா வின் கடைசி நாள் தீர்ப்புக்காக கபர்ஸ்தானில் மண்ணுக்குள் புகுந்து காத்திருந்தனர்! அத னுல்தான் அண்ணனுந் தங் கையும் ஒருவருக்கொருவர் ஆதரவானுர்கள். இது மட்டு மல்ல அதற்குக் காரணம். ஸலாம் வாழ்க்கை ஒரு கலை என்பதை இலட்சியமாகக் கொண்டவன். உலகத்தைத் திரையாகவும், அதில் வாழும் மனிதர்களை நடிகர்களாகவும், நடக்கும் நிகழ்ச்சிகளைக் காட்சி களாகவும், இவையெல்லாவற் றையும் ஆட்டிப் படைக்கும் ஆண்டவனை "டைரக்டராக வும்" மனப்பூர்வமாக நம்பினுன். இந்த நாடகத்துக்குக் கதை வசனம் எழுதிய ஆசாமி யார் என்பது மட்டும் அவனுக்குத் தெரியவில்லை. அதுவுந் தெரிந் திருந்தால் நாடகம் எப்போது முடியும் என்பதையும் வரை யறுத்திருப்பான்! அவனு டைய அந்த அருமையான இலட்சியத்தை அவன் நண்பர் களில் எவரும் ஏற்றுக்கொள்வ தாக இல்லை. அதற்குக் கார ணம் அவர்களில் எவருக்கும்

வீடு நிலம் பணம் வைத்து விட்டுப் போகும் பெற்ருேர் கிடைக்காதது தான்! அதனுல் தான் தன் தங்கை அஸ்ரா வைத் தனக்கு மாணவியாக ஆக்கிக்கொண்டான்.

களங்கமில்லாத இதயத்தைக் கற்பனைகளிடையே அமிழ்த்தி விட்டதால் அஸ்ராவின எண்ணங்கள் எல்லாம் கனவுலகிலிருந்து எங்கெங்கேயோ துள்ளி விளையாடின. பச்சையைக் குலுக்கி விரித்துப் பார்வையைப் பெரிதாக்கும் பசுமை நிறைந்த வயல்கள், தெளிந்த நீரோடைகள், வெண்மலர்களை உதிர்ப்பது போல நீர்த்துளிகளை அள்ளிக்கொட்டும் அருவிகள் இவைகளை நேருக்கு நேராகக் காணமுடியாவிட்டாலும் சித்திரங்களிலாவது பார்த்து மகிழுவாள். இயற்கையைச் செயற்கையாக்கி அதிலேயே சிந்தனைகளைச் செலுத்தும் அந்தப் பெண்ணின் மென்மையான இதயத்தில் நீலக்கடலிலிருந்து, வான்முட்டும் பனி படர்ந்த மலைச் சிகரங்கள் வரை பதிந்து அவளைத் தம் வசமாக்கிக் கொண்டன.

காலம்! அதன் வேகத்தைக் கணக்கிடத் தெரிந்தவர்கள் மேல்நாட்டார்தான். நமக்கு அதன் விளைதங்கள் தான் தெரியும். நம்மைப் போல அவர்கள் வருடங்களுக்கெல்லாம் பெயரிட்டு அறுபது வருடங்களுக்கு ஒரு தடவை மறைந்து போன வருடத்தை மறுபடியும் வரவழைத்துத் தொல்லை கொடுக்கமாட்டார்கள். தொடர்ந்து எண்ணிக் கொண்டே போவார்கள். அவர்களைப் போல நாம் காலம் உடலில் ஏற்படுத்தும் வடுக்களையும் மாறுதல்களையும் மூடி மறைத்து இளமையை "இமிடேஷன்" ஆக்கமாட்டோம். கருமுகிலைப் பார்த்துப் பழிக்கும கூந்தலைக் காலப்போக்கில் வெண்முகில் கண்டு சிரிக்கும் என்பது நமக்கு நிச்சயமாகத் தெரியும்!

ஆண்டுகள் தொடர்ந்து ஓடி மறைந்து கொண்டே வந்தன. இயற்கையின் பல பகுதிகளை வீட்டுக்குள் கொண்டு வந்து தங்கியிருக்கச் செய்யும் வேலையில் மும்மரமாக ஈடுபட்டிருந்தான் சலாம். மலர்க் குலத்தை மயக்கி ஏமாற்றி வண்டினம் உறிஞ்சிச் செல்லுந் தேனை மனிதன் தட்டிப் பறித்துச் செல்வதைப் போல இயற்கையிலிருந்து எழிலை வடித்தெடுக்கும் வேலையில் சலாம்ஈடுபட்டிருக்கும்போது அவனுடைய வாழ்வின் எழிலைக் காலம் கொஞ்சம் கொஞ்சமாகக் குடித்துமுடித்துவிட்டது. மாடி வீடு மண்குடிசையாக மாறியது. பட்டுப் பட்டாடைகளைக் கந்தலுடைகள் பரிமாறிக் கொண்டன. அந்தத் துயர் மிகுந்த சித்திரம்! அதை எந்தத் தூரிகையால் எப்படிப் பட்ட வர்ணங்களைக்கொண்டு சலாம்-அஸ்ரா வாழ்க்கைத் திரையில் காலம் தீட்டி முடித்ததோ தெரியவில்லை. கடைசியில் அஸ்ராவை எவன் கையிலாவது ஒப்படைக்க அவன் பட்ட பாடு...! அப்போது அவளை மணக்க முன் வந்த கமாலை ஆண்டவன் அனுப்பிய தூதனுக்கு இணையாகவே மதித்தான் சலாம்!

(அடுத்த இதழில் முடியும்)

வளரும் இலக்கியம்

பொன்மொழிகள்

பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்கள் முன்னர் பேசிய சொற்பொழிவுகள், எழுதிய கட்டுரைகள் இவற்றிலிருந்து தொகுத்த நன்மொழிகளின் கோவையே இப்புத்தகம். பொன்போன்ற கருத்துக்கள் அடங்கிய இப் புத்தகத்தைப் பொன்வண்ண அட்டையிட்டு அழகுபடுத்தியிருக்கிறார்கள் திருச்சி திராவிடமணிப் பதிப்பகத்தார். ஒவ்வொரு துறையாகப் பிரித்துக்கொண்டு, தலைப்பிட்டு கவர்ச்சி தரும்வகையில் அச்சிட்டிருக்கிறார்கள். பெரியார் கூறும் ஒவ்வொரு கருத்தும் புத்துணர்ச்சியையும் புரட்சி மனப் பான்மையையும் உண்டாக்குகின்றது. திருமணத்தைப்பற்றிப் பெரியார் கூறியதைக் கவனியுங்கள்.

> கல்யாணம் என்பது ஆணும் பெண்ணும் கூடி இயற்கை இன்பம் நுகரவும், வாழ்க்கையில் ஏற்படும் சிரமத்திற்கு இளைப்பாறவும், ஆயாசம் தீர்க்கவுமே ஆணுக்கு ஓர் பெண்ணும், பெண்ணுக்கு ஓர் ஆணும் வேண்டியிருக்கிறதென்பதைப் பெரும்பாலோர் சிந்திப்பதில்லை.

இது எத்தனை உண்மையான கருத்து. ஆனால் இன்று பெரியார் என்ன செய்திருக்கிறார். தமது பொன்மொழியைத் தானே சிந்திக்க மறந்து, '*Platonic Marriage*' செய்து கொண்டிருக்கிறார். இயற்கை இனபம் நுகர்வதற்காக அல்லாமல் வாரிசுக்காகத் திருமணம் செய்துகொண்டிருக்கிறார். இன்னும் அவர் பொன்மொழி என்ன சொல்கிறது பாருங்கள்.

> பாமர ஜனங்கள் கல்யாணம் என்றால் வேலைக்கு ஆள் வைப்பதுபோலக் கருதுகிறார்கள்.

இப்படிக் கூறும் பெரியார் தமது சொத்தைப் பாதுகாக்கும் வேலைக்கு ஆள்வைப்பதற்குத்தானே இன்று திருமணம் செய்துகொண்டிருக்கிறார். அப்படித்தானே இன்று வாதாடுகிறார். இவருக்கும் பாமரருக்கும் என்ன வேற்றுமையிருக்கிறது? இதை நாம் எடுத்துக்கூறிய பிறகு ஒருவேளை இப்புத்தகம் வெளியிட்டதே திராவிடமணிப் பதிப்பகத்தாரின் பித்தலாட்டம் என்று கூறலாம். ஆனால் அவர்கள் முன்னெச்சரிக்கையாகவே அவருடைய அனுமதியைப் பெற்று வெளியிட்டிருக்கிறார்கள். இப் பொன்மொழிகளையும், பெரியாரின் இன்றைய செயல் முறையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது 'சொல்வதெளிது' என்ற உண்மைதான் புலனாகிறது. விலை ரூ. 0–14–0. திராவிடமணிப் பதிப்பகம், தெப்பக்குளம், திருச்சி,

காதல் உள்ளம்

சங்கப் பாடல்கள் சிலவற்றிற்கு விளக்கம் கூறும் கட்டுரைகள் சில அடங்கிய புத்தகம் இது. சங்ககாலப்பாடல்களை எளிதில் புரிந்துகொள்ள விரும்புவோர் இந்நூலை ஒரு முறை படிக்கலாம். ஆசிரியர்: சாமி பழனியப்பன். வெளியிட்டோர்: பைந்தமிழ்ப் பதிப்பகம, காரைக்குடி. விலை 6 அணா.

தியாகி திருப்பூர்க் குமரன்

திருப்பூர்க் குமரன் வாழ்க்கை வரலாற்றை விவரமாகத் தெரிந்து கொள்ளலாம் என்று ஆசையோடு புத்தகத்தைப் பிரித்தோம். ஆனல் ஏமாற்றமடைந்தோம். வெறும் அடுக்குத் தொடர்க் கோவையாக இருக்கிறது புத்தகம் முழுவதும். ஆசிரியர்: ஈரோடு மு. சுப்பையன். வெளியிடுவோர் ஜம்னு நிலையம், 6/330 நேதாஜி ரோடு, ஈரோடு. விலை 6 அணா.

ஈழகேசரி (ஆண்டுமலர்)

'ஈழநாடும் திராவிடச் சிற்பமும்' என்ற அரியகட்டுரையுடன் மலர் துவங்குகிறது. எஸ். வையாபுரிப்பிள்ளை, பெ. தூரன். க. நவரத்தினம், மு. பாலசுந்தரம், த. ராஜேஸ்வரி இன்னும் பல அறிஞர்களின் கட்டுரைகளுடன் சிறந்து விளங்குகிறது. இலங்கையில், இருபதாண்டுகளாக தமிழ்ப் பணியாற்றும் வாரப் பத்திரிகை 'ஈழ கேசரி' இன்னும் பல்லாண்டு நிலவுக என வாழ்த்துக் கூறுகிறோம். விவரத்திற்கு, 'ஈழகேசரி' திருமகள் அச்சகம், சுன்னுகம் இலங்கை.

கலைமணி

இப்பொழுது வெளிவரும் சினிமாப் பத்திரிகைகளுக்கு ஒரு படி உயர்ந்து விளங்குகிறது கலைமணி: சினிமா பற்றிய கட்டுரைகள், துணுக்குகள், நட்சத்திரப் பேட்டி, கேள்வி பதில் இவற்றுடன் ரசத்திரட்டு, வழக்கமும் பழக்கமும் என்ற சுவையான பகுதிகளும் இருக்கின்றன. நட்சத்திரப் பேட்டி புதிய முறையில் அமைந்திருக்கிறது. ஆசிரியர்கள்: அரு. இராமனுதன், அரு. சண்முகநாதன். விலை அணா 8. கலைமணி காரியாலயம், கண்டோன்மென்ட், திருச்சிராப்பள்ளி.

—வேத்தரசன்

வரப்பெற்றோம்

ராமராஜ்யத்திலே ராதா: கே. தங்கராஜ் எழுதியது. புதுமைப்பண்ணை, அலங்காநத புரம் ரோடு, மணிக்கூண்டு P. O. திருச்சிராப்பள்ளி. விலை 4-அணா.

சந்திரலோகம்—ஜிநாத் எழுதியது. அன்னபூரணி நிலையம், 17, கோவில் தெரு, திண்டுக்கல். விலை 2 அணா.

ராஜகுமாரி: ஆனந்தலிங்கம் எழுதியது, ஜாலிபப்ளிஷர்ஸ் கோயமுத்தூர். விலை 1 அணா.

வீழ்ந்த வெள்ளிகள்: மதிதாசன் எழுதியது. அறிவுமலர்ப்பதிப்பகம், கோவிந்தக்குடி P. O. via கும்பகோணம். விலை 6 அணா.

இடிமுழக்கம்: (மாதமிருமுறை) ஆசிரியர்கள் மு. க. மீரா, வீ. கு. ஜீவானந்தம். 201–A. தஞ்சபசார். ரோடு, சிங்கப்பூர். விலை 20 காசு.

கிள்ளைவிடு தூதும் வேற்றியும்: ஆசிரியர் ஜீவபந்து T.S ஸ்ரீபால் தென்னிந்திய ஜீவரட்சா பிரசாரசபை. சௌகார்ப் பேட்டை சென்னை. அன்பளிப்புவெளியீடு

PRINTED BY AR. PERIYANNAN AT THE SENTHAMIZH PATHIPPAKAM
EAST MAIN STREET, PUDUKKOTTAI.
EDITOR & PUBLISHER: MURUGU SUBRAMANIAN